


# தமிழரசு

16-12-1977 50 காசு

# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு - வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

16—12—1977

மலர் : 8 இதழ் : 12


## இந்த இதழில்...


| | பக்க எண் |
|---|---|
| சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். | 2 |
| ராஜாஜியின் கனவை நனவாக்குவோம்!.. | 4 |
| மதுவிலக்கைத் தீவிரப் படுத்தி மகிழ்ச்சி நிலவச் செய்வோம்! ... | 9 |
| மகாகவியின் மகத்துவம் ... | 12 |
| மகாத்மாவின் மனச்சாட்சிக் காவலர்... | 15 |
| நாடகத்திற்கு ஒரு சங்கரதாசர் ... | 17 |
| சாலை விபத்துக்கள்! ... | 20 |
| பட்டமும் செய்தியும் ... | 2 |
| இராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது ! ... | 27 |
| துண்டிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்புகள் துரிதமாகச் சீரமைக்கப்பட்டன! ... | 28 |
| இரயில்வே துறையினர் இரவு பகல் பாராது பாடுபட்டு, இரயில் போக்குவரத்தை மீண்டும் துவக்கினர்!... | 29 |
| அழகைக் காட்டும் கண்ணாடி! ... | 31 |
| மனித உரிமைகள் ... | 33 |
| கண்களைக் குளமாக்கும் கதைகள்! ... | 30 |
| தமிழ்நாட்டு அறிவு! ... | 41 |
| நிதி குவிகிறது! ... | 45 |
| எதிர்காலச் சமுதாயம் சீரோடும், சிறப்போடும் வாழ ஒன்றுபட்டு உழைக்க முன்வருவீர்! ... | 47 |


## கல்வி நிலையங்களில் வள்ளுவர் பெரியார் அண்ணா ராஜாஜி காமராஜ் உருவப் படங்கள் !

மறைந்த தமிழகத் தலைவர்களின் உருவப்படங்களைக் கல்வி நிலையங்களில் வைப்பது பற்றி அரசு பரிசீலித்து கீழ்க் குறிப்பிட்ட தலைவர்களின் படங்களை எல்லாக் கல்வி நிலையங்களிலும் வைக்கலாம் என்று முடிவு எடுத்துள்ளது.

திருவள்ளுவர்

பேரறிஞர் அண்ணா

கே. காமராஜர்

ராஜாஜி

தந்தை பெரியார்


இவர்களின் உருவப் படங்களை வைக்கலாம்.

கல்வி நிலையங்களில் வைக்கப்படும் இந்தப் படங்கள் எல்லாம் ஒரே அளவில் இருக்க வேண்டும். இதற்கு முன்பு ஏதேனும் படங்கள் இருந்தால் அந்தப் படங்களின் அளவுக்கு இந்தப் படங்களும் இருக்க வேண்டும். பொதுத்துறை அங்கீகரித்த படங்களையே வைக்க வேண்டும்.

## "தமிழரசு" வாசகர்களுக்கும் ஏஜெண்டுகளுக்கும் முக்கிய அறிவிப்பு!

அடுத்த இதழ் முதல் வாசகர்களின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப, கேள்வி-பதில் பகுதியையும், அனைத்துத் துறைகளைப் பற்றிய செய்திகளையும் தாங்கி, அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் அரிய படைப்பாகத் ''தமிழரசு'' வெளிவரவிருக்கிறது. மேலும் ''தமிழரசு'' இதழ்களைக் காலதாமதமின்றி, குறிப்பிட்ட தேதியில் வெளியிடவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமிழரசு வாசகர்களும், ஏஜெண்டுகளும் ''தமிழரசு'' இதழின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.



# சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

## (1878-1972)

"ராஜாஜி" என அன்போடு அழைக்கப்படும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் 1878ல் தமிழ்நாட்டில், தற்போது தர்மபுரி மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளி என்னும் கிராமத்தில் பிறந்தார். அவர் பெங்களூர் சென்ட்ரல் காலேஜிலும், சென்னை சட்டக் கல்லூரியிலும் படித்தார். 1900ல் தொடங்கி 1919 வரை சேலத்தில் வக்கீல் தொழில் நடத்தினார். 1906 முதற் கொண்டே சுதந்தர இயக்கத்தோடு அவரது ஈடுபாடு தொடங்கியது. ஆனால் நாட்டுக்குத் தீவிரப் பணி புரிய வேண்டுமென்ற வேகம் வளர்ந்து, அவர் வக்கீல் தொழிலைத் துறந்து, காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தில் 1919ல் சேர்ந்து, 1920ல் தேசியப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

ராஜாஜி 1921ல் இந்திய தேசிய காங்கிரசின் காரியதரிசியாகவும், பின்னர் 1922 முதல் 1942 வரையிலும், 1951 முதல் 1954 வரையிலும் காரியக் கமிட்டி உறுப்பினராகவும் இருந்தார். 1921—42 காலத்தில் அவர் சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்துக்காக, 6 முறை சிறைப் படுத்தப்பட்டார். காங்கிரஸ் தலைவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர் 1942 ஏப்ரலில் காங்கிரசிலிருந்து விலகினார். 1930ல் அவர் இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் (Prohibition League of India) காரியதரிசியாகப் பணியாற்றினார். 1937 முதல் 1939 வரை அவர் சென்னை ராஜதானியின் பிரதமராக இருந்தார். சில ஆண்டுகள் அவர் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபையின் உபதலைவராகவும் இருந்துள்ளார். 1944-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி காலஞ் சென்ற ஜின்னா அவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது ராஜாஜி பெருந் துணை புரிந்தார். 1946—47ல் ஏற்பட்ட இடைக்கால மந்திரி சபையில் அமைச்சராகவும் ஆகஸ்டு 1947 முதல் ஜூன் 1948 வரை மேற்கு வங்காளத்தின் கவர்னராகவும் இருந்தார்.

ராஜாஜி 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தற்காலிக கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றினார். பின் ஜூன் 1948 முதல் ஜனவரி 1950 வரை முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகப் பணிபுரியும் பெருமை பெற்றார். அவர் ஆற்றிய நாட்டுப் பணிகளுக்காக அவரைக் கௌரவிக்கும் முறையிலும் அவரது திறமைகளைப் பாராட்டும் முறையிலும் நாடு இந்த உயர் பதவியை அன்னாருக்கு அளித்தது. இதன் பிறகு அவர் 1950 ஜூலை முதல் டிசம்பர் வரை மத்திய மந்திரி சபையில், இலாகா இல்லாத மந்திரியாகவும் 1950—51ல் உள் துறை அமைச்சராகவும், பிறகு 1952—54ல் சென்னை மாகாணத்து முதலமைச்சராகவும் பணி புரிந்தார். அவர் ஆற்றிய ஒப்பற்ற சேவைகளுக்காக 1954ல் அவருக்கு நாட்டின் தலை சிறந்த 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.

உலக அமைதியில் பெரும் நாட்டங் கொண்ட ராஜாஜி அணு குண்டுச் சோதனைகளைத் தாட்சண்யமின்றிக் கடுமையாகக் கண்டித்து வந்தார். அதற்காகவே தீவிர இயக்கம் நடத்தி வந்தார். அணு ஆயுதங்களை ஒழிக்க ஆதரவு தேட காந்தி அமைதி இயக்கத்தின் (Gandhi Peace Foundation) சார்பில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட தூதுக் குழுவின் முக்கியமானவராக அவர் சென்றார். ஆன்மீகம், அற நெறியில் ஆழ்ந்த அவர் மனமும் உலக மக்களின் நலனில் அவர் கொண்ட தணியா ஆர்வமுமே இந்த அணு குண்டு எதிர்ப்பாக அவரிடம் வெளிப்பட்டது.

மதத்தின் அடிப்படைத் தத்துவங்களே அவர் வாழ்க்கையின் நெறிகளாக இருந்தன. அவர் எழுதியுள்ள எல்லா நூல்களும் குழப்பங்கள் நிறைந்த உலகுக்கு அறவழி காட்டுபவைகளாக உள்ளன. உலகாயதத் தத்துவத்தின் வழி நிற்கும் நாகரிகம் அழிவு நோக்கிச் செல்லும் என உறுதியாக நம்பிய அவர், அறவழியில் வாழ்ந்தால்தான் என்றும் நிலைத்து நீடிக்கும் நாகரிகத்தை உருவாக்க முடியும் என்று கூறி வந்தார்.

நிலைநாட்ட முனைந்து நிற்போருக்குப் பெரும் ஊக்கமுட்டக் கூடியது.

காந்தியடிகள் சிறையிலிருந்த சமயத்தில் ராஜாஜி அவரது 'யங் இந்தியா' பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். 'ஸ்வராஜ்யா' பத்திரிகையில்பிரதானமாகஎழுதி வந்தவரும் அவரே. தன் மதிநுட்பத்தால் அவர் எந்தச் சிக்கலான பிரச்சினை தோன்றும்போதும் அதனைத் தீர்க்கவழி சொல்லத்தவறியதில்லை. பண்டித நேரு அவர்கள் தம் சுய சரிதையில் ''அவரது (ராஜாஜியின்) அறிவும் தன்னலமற்ற தன்மையும் பிரச்சினைகளை ஊடுருவிப் பார்த்து ஆராயும் திறமையும் எங்களுக்கு என்றுமே பெரும் மூலதனமாகப் பயன்பட்டன'' எனக் கூறியுள்ளார்.

1972 டிசம்பர் 25ல் அவரது மறைவில் நாம் பெரும் அறிவாளியையும், தேச பக்தரையும், ராஜதந்திரியையும் இழந்தோம். எனினும் அவர் வழங்கிச் சென்ற கருத்துக்கள் இன்றும் நமக்கு வழி காட்டி உதவுகின்றன.

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்த வீடு (தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்ற ஊரில் உள்ளது).



ராஜாஜி எழுதியுள்ள மார்க்கஸ் அரேலியர், சாக்ரடீஸ், வேதாந்தம், பகவத் கீதை, உபநிஷதங்கள், வாய்ஸ் ஆஃப் தி அன்இன்வால்வுட் ( Voice of the Uninvolved ) கம்பராமாயண—அயோத்தியா காண்டம் ஆகிய நூல்கள் பொக்கிஷங்களாகும். இராமாயண, மகா பாரத நூல்கள் நேர்த்தியும், நயமும் நிரம்பியவை. ' Hinduism Doctrine and way of Life ' என்ற நூல் அவரது வேதாந்தம் என்ற நூலின் விரிவான விளக்கமே. இது பிற நாட்டு மேதாவிகளால் மிகவும் பாராட்டப்படுகிறது. இதுவரை நம் மனித குலத்தைக் காப்பாற்றி வந்துள்ள ஆதார நம்பிக்கைகளுக்கும் சீலங்களுக்கும் பின்னணியாக நிற்கும் வேதாந்த உண்மைகள், அறநெறிகள் ஆகியவற்றைச் சிரத்தையுடன் கடைப்பிடித்தாலன்றித் தற்கால நெருக்கடிகள் மனிதவர்க்கத்தையே நிர்மூலமாக்கிவிடும். இந்நூலின் அடிப்படைக் கருத்து அற வழிப்பட்ட நாகரிகத்தை



சென்னையில் உள்ள ராஜாஜி நினைவாலயம்

# ராஜாஜியின் கனவை நனவாக்குவோம்!

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
திரு எம்.ஜி.ஆர். அவர்களின்
உரை

"தன் மனதில் தோன்றுவதை வெளிக் காட்டி அதைச் செயல்படுத்தப் பின்வாங்கு பவன் பொறுப்பேற்கத் தகுதியற்றவன்" என்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சொன்னார்கள்.

"ராஜாஜி அவர்களின் நேர்மையைப் பற்றியும், நிர்வாகத் திறனைப் பற்றியும் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். யாருக்கும் அஞ்சாமல்—விட்டுக்கொடுக்காமல்—கருத்தை எடுத்து வைப்பதில் வல்லவர் ராஜாஜி அவர்கள்.

"அதுபோல என் உள்ளத்தில் எழுந்த கருத்தைச் சொல்வது அவரைப் பின்பற்றுகிற நீங்களும்—மேடையிலே அமர்ந்திருப்பவர் களும்—விரும்புவார்கள் என்று நம்புகிறேன்.

**யாருக்காக உழைத்தார்?**

"ஒரு முறை ராஜாஜி அவர்கள் டெல்லியில் ஒரு கூட்டத்தில் பேசியபோது, அசம்பாவித நிகழ்ச்சி ஒன்று நடந்தது. மரியாதை தெரியாத ஒருவன்—இங்கிதம் தெரியாத ஒருவன்—பெரியவர்களை மதிக்கத் தெரியாத ஒருவன்—அழுகிய கோழி முட்டையை அவர் மீது எறிந்துவிட்டான்.

"அந்த அழுகிய கோழி முட்டை அவர் சட்டையில் பட்டுவிட்டது. ஆத்திரப்படாமல் துடைத்துக் கொண்டார். அப்போது அவர், "நான் எதற்காகப் பாடுபடுகிறேன், உழைக்கிறேன் என்றால், இப்படிப்பட்ட அழுகிப் போனவர்களின் உள்ளத்தைத் திருத்த வேண்டும் என்பதற்காகத்தான்" என்றார்.

"ராஜாஜி அவர்களின் பணிகளை எண்ணி, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்ற, செயல்பட்டு வருகிறேன் என்பதில் பெருமைப்படுகிறேன்.

"மக்கள் நாணயமாக வாழ வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் விரும்பினார்கள். மக்கள் நாணயமாக வாழ்வதற்குப் பாதுகாப்புத் தர வேண்டியது அரசின் கடமை என்பதை நான் உணருகிறேன்.

"இங்கே பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், புத்தகங்களும் வழங்கப்பட்டதைப் பார்த்தீர்கள்.

"எதற்காக இவைகள் எல்லாம் வழங்கப் படுகின்றன. இவர்களின் பேரன், பேத்திகள் இவர்கள் பெற்ற பரிசுகளைப் பார்க்கும்போது, மூதறிஞர் ராஜாஜியின் 100-வது பிறந்த நாள் விழாவில் பெரியவர்கள் மற்றும் ஆளுநர் முன்னிலையில், முதலமைச்சர் வழங்கினார் என்ற செய்தியைப் பார்க்கும்போது அவர்களுக்குப் பெருமையாக இருக்கும்.

"அதற்கு மாறாகத் தனது தாத்தா வெடிகுண்டு வைத்தார்; தீ வைத்தார்; பஸ்ஸைக் கொளுத்தினார்; கல்லெறிந்து பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தினார்; பெண்கள் என்று பாராமல் கல்லெறிந்து, அவர்களைக் காயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்—கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்ற செய்தியைப் பார்ப்பார்களேயானால், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க—அவர்கள் ஆக்க முயற்சியில் ஈடுபட—ஊக்கம் அளிக்கும் பணியில் அனைவரும் ஈடுபட—வேண்டுகிறேன்.

**"இன்றைக்கு மூதறிஞர் ராஜாஜி அவர்களை எதற்காகப் பாராட்டுகிறோமோ, அந்த மூதறிஞர் பிறந்த நாட்டில், நாட்டின் முன்னேற்றத்திற்காக யார் தடையாக இருந்தாலும்**




முதன் முதலாக நல்லவை யாவும் முயன்று முடிக்கும் தமிழ்நாடு அரசு, மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 100-வது பிறந்த நாள் விழாவை, 8-12-1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் முதன்முதலாக அரசின் சார்பில் கொண்டாடியது. அவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

—அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும்—அவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள்.

''ஆட்சியில் இருக்க உரிமை வழங்கும் மக்கள் நம்பிக்கையைப் பெற்ற மூதறிஞர் ராஜாஜி அவர்கள், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் செயல்பட்டார்கள்.

## மக்களுக்குத் தொண்டு செய்யவே தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்!

''ராஜாஜி அவர்கள் பதவிக்குச் சென்று சட்ட மன்றத்தில் பேசும் போது ஒன்றை அடிக்கடி... குறிப்பிடுவார்கள் என்பதை நான் கூறியிருக்கிறேன்.

''நான் தொலைநோக்குப் பார்வையோடு 100 ஆண்டுகளுக்குப் பயன்படும் திட்டத்தைப் போடுகிறேன். ஆனால், அதே நேரத்தில் அடுத்த வினாடி பதவி விலக ராஜினாமாக் கடிதத்தைச் சட்டைப் பையில் வைத்திருக்கிறேன்'' என்று குறிப்பிடுவார்கள்.

''மாஜிஸ்திரேட்டாக இருந்து, நீதிபதியாக, உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெறுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

''மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக, உயர்ந்த பதவியில் இருந்தவர். ஆனால் ராஜாஜி அவர்கள் உயர்ந்த பதவி, சின்னப் பதவி என்று கணக்குப் பார்க்காமல், மக்களுக்குத் தொண்டாற்றுவதில் தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்.

''இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் மேற்கு வங்கத்தின் கவர்னராக இருந்தும் பணியாற்றி இருக்கிறார்கள்.

''அதற்குப் பிறகு, தமிழகத்தில் பல மாநிலங்கள் ஒன்றாக இருந்த சென்னை மாநிலத்தில், காங்கிரஸ் கட்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் குறைவாக இருந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக—வேறு கட்சி ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காக—முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

'அப்போது திறமையான நிர்வாகத்தால், தூய்மையான ஆட்சியை நடத்தினார். தனக்கு கெட்ட பெயர் வரும் என்று கருதாமல் மக்கள் நலத்துக்காகத் துணிச்சலோடு செயல்பட்டார். கட்சி நலன் கருதாமல், பொதுமக்களின் நலனையே முக்கியமாகக் கருதிச் செயல்பட்டார்.

## ராஜாஜி கண்ட கனவை நனவாக்குவோம்!

''தமிழகத்தில் மீண்டும் உண்மையான மதுவிலக்குக் கொண்டு வர வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் கூறினார்கள். ராஜாஜி அவர்கள் கண்ட கனவை நனவாக்க மதுவிலக்கு கண்டிப்பாக அமல் நடத்தப்படும்.

''உறவு, கட்சி, ஜாதி, மதம், வசதி படைத்தவர்கள், வேண்டியவர்கள் என்று எதைப் பற்றியும் பாராமல், ராஜாஜி அவர்களின் கொள்கையான மதுவிலக்கு அமல் நடத்தப் படும்.

''மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கையை நிறைவேற்ற எது குறுக்கே நின்றாலும் அது அகற்றப்படும்.

ராஜாஜிக்குச் சிலை வைப்போம்!

''மூதறிஞர் ராஜாஜியின் 101வது பிறந்த நாள் விழாவில் ராஜாஜியின் திருவுருவச் சிலை சென்னை பாரி முனையில் வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

''மூதறிஞர் ராஜாஜி அவர்கள், தியாகத்தால்—அறிவாற்றலால்—மக்கள் தொண்டால்—உயர்ந்து நின்றார். அவரின் அறிவாற்றலை உலகம் போற்றியது. அவருக்குச் சிலை வைப்பது பொருத்தமானது என்று கருதுகிறோம்.

''சென்னை நகரமே விழாக் கோலம் பூண்ட நகரமாக அமையும் விதத்தில் ராஜாஜி சிலை திறப்பு விழா கோலாகலமாக நடைபெறும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், சென்னை ராஜாஜி மண்டபத்தில் 8—12—'77 அன்று நடைபெற்ற ராஜாஜியின் 100-வது பிறந்த நாள் விழாவில், மூதறிஞர் ராஜாஜியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரையில் சில பகுதிகள்.]

## முதன் முதலில் மதுவிலக்குத் திட்டத்தைச் செயல் படுத்தியது தமிழ்நாடே!

இந்தியாவில் முதன் முதலாகக் கள்ளை ஒழித்தது தமிழ்நாடு தான். 1938-ஆம் ஆண்டில், சென்னை மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்ற திரு இராஜாஜி அவர்கள், முதன் முதலாகச் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்குத் திட்டத்தைச் செயல்படுத்தினார்.

## ராஜாஜி அஞ்சல் தலை

ராஜாஜியின் நூற்றாண்டு விழா நினைவாக அஞ்சல் தலை வெளியிடுவது என்றும், டெல்லி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் ராஜாஜியின் முழு உருவப் படம் வைப்பது என்றும் ராஜாஜி நூற்றாண்டு விழாக்குழு முடிவு செய்திருக்கிறது.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்கள் தலைமையில் ராஜாஜி நூற்றாண்டு விழாக் குழுவினரின் கூட்டம் நடந்தது. நாட்டின் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் சிறந்த சேவை செய்பவர்களுக்கு, ராஜாஜி அவர்களின் நினைவுப் பரிசாக ஆண்டுதோறும் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள விருது அளிப்பது என்றும், சென்னையில் ராஜாஜியின் நினைவாக நூல் நிலையம் ஒன்று அமைப்பது என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## ராஜாஜி பிறந்த வீடு நினைவுச் சின்னம் ஆக்கப்படும்!

ராஜாஜி பிறந்த வீடு நினைவுச் சின்னமாக்கப்படுகிறது.

தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்ற ஊரில் ராஜாஜி பிறந்த வீடு உள்ளது. அந்த வீட்டை அரசாங்கம் விலைக்கு வாங்கி அதைப் பராமரிக்கும் பொறுப்பைப் பொதுப்பணித் துறைக்கு விட்டு இருக்கிறது.

பழைமை வாய்ந்த அந்த வீட்டைச் சீர்ப்படுத்தி, அதை ஒரு நினைவுச் சின்னமாக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

விரைவில் அங்கு ஒரு நூல் நிலையம் அமைக்கப்படும். அதில் பெரும்பாலும் ராஜாஜி எழுதிய நூல்களே இடம் பெறும்.

இது தவிர வீட்டின் உட்புறச் சுவர்களில் ராஜாஜியின் பொன்மொழிகள் பொறிக்கப் படும்.

ராஜாஜியின் நூற்றாண்டு விழாவையொட்டி ராஜாஜி பிறந்த வீட்டில் நடந்த விழாவில் பேசும்போது, இந்தத் தகவலைத் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. ரங்காராவ் அவர்கள் தெரிவித்தார்.

# தமிழகத்தின் பெருமையை உலகில் உயர்த்தியவர்!

"ராஜாஜியின் பிறந்தநாள் விழா இன்று (8-12-1977) தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்படுகிறது.

"அடுத்த ஆண்டு நூறாவது ஆண்டு நிறைவு நாள் வருகிறது. அதுவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

"புரட்சித் தலைவர் முதல்வராக வந்தவுடன், தமிழகத்தில் பிறந்த அறிஞர் பெருமக்களுக்கு அரசின் சார்பில் விழா நடத்தப்படும் என்று அறிவித்தார்.

"அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், கவிபாரதி, முத்துராமலிங்கத் தேவர், வ. உ. சி. ஆகியோரின் பிறந்தநாட்கள் கொண்டாடப்பட்டன.

"தமிழகத்தின்-இந்தியத் துணைக் கண்டத்தின்-பெருமையை உலகில் உயர்த்தியவர் மூதறிஞர் ராஜாஜி! அண்ணாவால் பாராட்டப்பட்ட மூதறிஞரின் பிறந்தநாள் விழாவை அரசு நடத்துகிறது.

"ஒரு நாட்டின் பெருமை அதன் நீள அகலத்தைப் பொறுத்து இருப்பதில்லை. அங்குள்ள அறிஞர் பெருமக்களை பொறுத்துதான் அதன் பெருமை இருக்கும்!

"இந்த நாட்டின் பெருமையை உயர்த்திய ஆற்றல்மிக்க தலைவர்களுள் ராஜாஜி ஒருவர்.

"இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகளின் தொண்டராக-தோழனாக-விளங்கினார். காந்தியடிகளுக்குச் சங்கடம் வந்தபோது எல்லாம், உற்ற துணையாக இருந்து நல்ல ஆலோசனை வழங்கியவர். விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் சக்தியாக விளங்கியவர்.

"வெள்ளைக்காரர்களுக்குச் சவால் விடும் வகையில் ஆற்றல் மிக்கத் தலைசிறந்த நிர்வாகியாக விளங்கினார்.

"கருத்து வேறுபாடு கொண்ட நேரத்திலும் எதிர்ப்புக்கு அஞ்சித் தனது கருத்துக்களைச் சொல்லத் தயங்கியதில்லை.

"தவறுகளைச் சுட்டிக்காட்டவும் தயங்கியதில்லை. ஆட்சிக்கு முன் மாதிரியாக விளங்கினார்.

**"அரசியலில் தூய்மை-ஒழுக்கம்-நியாயம் வேண்டும் என்றார். இலஞ்ச-லாவண்யம் அற்ற நிர்வாகம் நடத்திக் காட்டியவர் ராஜாஜி."**

[மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், சென்னை ராஜாஜி மண்டபத்தில் 8-12-1977 அன்று நடைபெற்ற ராஜாஜியின் 100-வது பிறந்த நாள் விழாவில் ஆற்றிய வரவேற்பு உரையில் இருந்து தொகுக்கப்பட்டது.]

# மனித உணர்ச்சிகளின் பாதுகாவலன்!

"இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய விடுதலை வரலாற்றில், ராஜாஜியின் வாழ்க்கை பின்னிப் பிணைந்து இருக்கிறது.

"ராஜாஜி தமிழகத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல! மனிதாபிமான உணர்வின் பிரதிபலிப்பாக இருந்தார்! மனித உணர்ச்சிகளின் பாதுகாவலனாக இருந்தார்!

"எதிர்ப்புகளுக்கு அஞ்சாதவர். எதிர் நீச்சல் போட்டே வாழ்க்கை நடத்தியவர்; தீர்க்க தரிசனம் கொண்டவர்.

"ராஜாஜியின் 100-வது பிறந்தநாளை சர்வதேச மனித உரிமை ஆண்டாகக் கொண்டாட வேண்டும்."

—பிரபுதாஸ் பட்வாரி,
தமிழக ஆளுநர்.

# சிறந்த சமூக சீர்திருத்தவாதி!

"தலைசிறந்த தேசியத் தலைவர்களில் ஒருவராக ராஜாஜி விளங்கினார். அவருக்குத் தமிழக அரசு விழா எடுப்பதைப் பாராட்டுகிறேன். "ராஜாஜி அவர்கள் ஒரு சிறந்த சமூக சீர்திருத்தவாதி. மகாத்மா காந்தியடிகளின் பிரதம சீடராக இருந்தார்.

"மதுவிலக்கில் தீவிரமாக இருந்தார்; தலைசிறந்த பார்லிமெண்டேரியன்.

"நிர்வாகத்தில் நாணயம், ஒழுக்கம் இருக்கப் பாடுபட்டார்.

"ராஜாஜியை நான் எதிர்த்த காலத்திலும், என் மீது அவருக்குப் பற்று-பாசம் குறையவில்லை.

"அவர் காட்டிய நல்வழிகளை மறந்துவிடக்கூடாது. அவர் காட்டிய வழியைப் பின்பற்றி தீய சக்திகளை அகற்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்."

—திரு எம். பக்தவத்சலம்

# தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ராஜாஜி செய்த பணி!

"தாழ்த்தப்பட்ட மக்கள் ராஜாஜிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

அவரால்தான், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித்தொகுதி ஏற்பட, காந்தி-அம்பேத்கார் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அவர் முதல்வராக இருந்தபோதுதான், ஆலயப் பிரவேசம் நடந்தது.

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தையும் அவர்தான் கொண்டு வந்தார்.

—திருமதி சத்தியவாணி முத்து

# புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகள்!

"தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயல்-மழையால் பாதிக்கப்பட்ட மக்களுள் பலர், நெசவாளர்கள் ஆவர். இம் மாவட்டங்களில் ஏறக்குறைய 5 ஆயிரம் நெசவாளர்கள் வீடு இழந்தும், தறியிழந்தும், நூல், துணிகள் பாழடைந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே வீடு இழந்தோருக்கு தலா ரூ. 200 மானியமாக அளிப்பது என அரசு முடிவு எடுத்து வினியோகித்துள்ளது.

''நெசவாளர்களைப் பொறுத்த வரை அவர்களது வீடுகள் தொழிற்கூடங்களாகவும் அமைவதால் தங்கள் வீடுகள் மீண்டும் கட்டிக் கொள்வதற்கான இந்த மானியத் தொகையுடன் மேலும் ரூ. 300 கடனாக அளிப்பது என அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர அவர்களது தறி மற்றும் உபகரணங்கள் சேதப்பட்டிருந்தால் தலா ரூ. 125 அளிக்கப்படும்.

''மாநில அரசு அளிக்கும் இந்த உதவியோடு இதே அளவுக்கு வீட்டுக்கு ரூ. 500 வீதமும் தறி மற்றும் உபகரணங்களுக்கு 125 ரூபாய் அளிக்க மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களால் நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க ரூ. 22 இலட்சம் மாநில அரசால் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது,

''மாநில அரசு அளிக்கும் 625 ரூபாயோடு மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கும் 625 ரூபாயும் சேர்த்து மொத்தம் ரூபாய் 1,250 கிடைக்கும்.

''இத்தொகையைக் கைத்தறி நெசவாளர்கள் தறிகள் வாங்கவும், கட்டிடம் கட்டவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

''முசிறி, மணல் மேடு பகுதிகளில் 2 ஆயிரம் நெசவாளர்களின் வீடுகள் சேதம் அடைந்துள்ளன. மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து வங்கிகள் மூலம் அவர்களுக்கு ரூ. 500 கடன் கிடைக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

"இந்தத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 80 லட்சம் செலவாகும். மத்திய அரசிடம் இந்த நியாயமான காரியத்திற்காகக் கேட்டிருக்கிறோம். அவர்களும் இதைக் கொடுத்து உதவுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மத்திய அரசு ஒதுக்கிய ரூபாய் 33 கோடி உதவியில் கைத்தறி நெசவாளருக்கான நிவாரணம் சேர்க்கப்படவில்லை. ஆகவே அதைத் தனியாகக் கேட்டிருக்கிறோம்,

''மத்திய அரசு அதிகாரிகளும் வந்து பார்த்துப் போயிருக்கிறார்கள். தேவைப்பட்டால் மாநில அரசு மேலும் நிதி ஒதுக்கும். தமிழகக் கைத்தறி நெசவாளர்களைத் தொழில் கூட்டுறவின் கீழ்க்கொண்டு வரவும் முயற்சி எடுக்கப்படும்.''

இவ்வாறு மாண்புமிகு தமிழகக் கைத்தறித்துறை அமைச்சர் திரு கே. ராஜாமுகமது அவர்கள் கூறினார்.

## புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசு அளித்துள்ள உதவிகள் !

அண்மையில் தமிழகத்தில் வீசிய புயலினால் தஞ்சை, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை ஆகிய மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் பெரும் அவதிக்கு உள்ளானார்கள்.

புயலினாலும், வெள்ளத்தினாலும் மீனவர்கள் தங்களது கட்டுமரம், படகு, வலை முதலியவைகளைப் பறி கொடுத்தார்கள். இதனால், அவர்கள் தொடர்ந்து மீன் பிடி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

மீனவர்கள் தங்கள் உடைமைகளை இழந்து விட்டனர். அதன் மதிப்பு ஒரு கோடியே 33 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்களைப் பழுது பார்க்கவும், புதிதாகச் சாதனங்களைப் பெறவும் தமிழக அரசு ஒரு கோடியே 32 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளது.

இதில் 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் கடனாகவும் கொடுக்கப்படும். இந்த உதவி நேரடியாகப் பணமாகக் கொடுக்கப்படாமல் மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி சாதனங்களாக மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உதவி இயக்குநர் மேற்பார்வையில் வழங்கப்படும்.

இந்த உதவியில் கடனாகக் கொடுக்கப்படும் தொகை வட்டியில்லாத கடனாகும். இந்தக் கடன் தொகையை 30 மாதத் தவணைகளில் மூன்று ஆண்டுகளுக்குள் அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டும்.

புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் மீனவர் குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

# மதுவிலக்கைத் தீவிரப்படுத்தி மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



**திரு பிரபுதாஸ் பட்வாரி,**
**தமிழ்நாடு ஆளுநர்.**

ஆழ்ந்த அறிவாளியும், அரசியல் ஞானியுமாகிய கௌடில்யர் கி.மு. 321-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 296-ஆம் ஆண்டிற்கும் இடையில் அரசியல் கலை பற்றிய, காலத்தால் அழியாத ஆய்வு நூலை எழுதினார். அந்நூலில் அரசர்கள், அமைச்சர்கள், அலுவலர்கள் ஆற்றவேண்டிய பணிகள், கடமைகள், ராஜதந்திரக்கலை ஆகியவை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆசையின் காரணமாகத் தோன்றும் வேட்டையாடுதல், சூதாடுதல், பிறபெண்கள் மேல் காமுறுதல், குடிப்பழக்கம் முதலிய நான்கு கெட்ட பழக்கங்களைப் பற்றியும் கௌடில்யர் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். எல்லா கெட்ட பழக்கங்களுக்கும் குடிப்பழக்கமே தாய் போன்றதாக இருப்பதால், குடிப்பழக்கத்தை மிகவும் கொடிய,தீய பழக்கமாகக் கருதினார்.

''எல்லாப் பாவங்களையும் தராசின் ஒரு தட்டில் போட்டு, மறு தட்டில் குடிப் பழக்கத்தைப் போடலாம் (அவை ஒன்றுக்கொன்று சரி சமமாக இருக்கும்). இவ்வாறு சில பழைய ஒழுக்கவிதிகள் கூறுகின்றன. ஒழுங்கு நிலை தவறிய மனத்தின் காரணமாகக் குடிப்பழக்கம் உள்ள மனிதன் எல்லாவற்றிலும் தவறு செய்வதுடன், பொய்யை உண்மையென்று கூறி-பிதற்றி, கானலை நீரென்று நம்பி-சீரழிகின்றான். மதுவின் மயக்கத்தினால், குடிகாரன் தன் சொந்தத் தாயைக்கூட வெட்கமின்றி விரும்புகின்றான்.

துரதிர்ஷ்ட வசமாக பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டவுடன், மது வியாபாரம் அரசின் அரவணைப்பைப் பெற்றது. குடிப்பதை வாழ்க்கை வழியாகவும், கேளிக்கை மண்டபங்களில் மது அருந்தி மகிழும் பழக்கத்தையும் கொண்ட பிரிட்டிஷ்காரர்கள், மதுவுக்கு கௌரவம் அளித்தனர். ஆடம்பரமான சமுதாயத்திற்கு அவசியமான ஒன்றாகக் குடிப்பழக்கம் இந்நாட்டில் புகுத்தப்பட்டது. இதன் காரணமாக மதுவின் தீமைகள் மளமளவென்று பரவின.

பொருளீட்டுவதற்குரிய பெரும் ஆதாரம் எரிசாராயம் மற்றும் போதைப் பொருள்களே என்று கருதி அவைகளின் மீது கலால் வரி விதித்ததில், பிரிட்டனைச் சார்ந்த கிழக்கு இந்தியக் கம்பெனியே முன்னோடியாக விளங்கியது. வரம்பு மீறிய குடிப்பழக்கத்தினால் ஏற்படும் மயக்கம் காரணமாக மக்களிடம் காணப்பட்ட மதவிரோதப் போக்கு, நீதி வழுவிய பண்பு, பரவலாகக் காணப்பட்ட பேரிடர் ஆகியவைகளைக் கண்டு இந்த நாட்டில் இருந்த சிந்திக்கக்கூடிய நாட்டுப்பற்று மிக்க சிலர் அஞ்சினர்.

## மகாத்மா காந்தியின் முயற்சிகள்

மது மற்றும் போதைப் பொருள்களுக்கு எதிராகப் பொது மக்களின் ஆதரவைப் பெருமளவில் திரட்டும் பொறுப்பு மகாத்மா காந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர், பிரிட்டிஷ் அரசின் ''மது மற்றும் போதைப் பொருள்களின் மீது வரி விதிக்கும் கொள்கை''க்கு எதிராக ஓர் இயக்கத்தைத் துவக்கினார். போதைப் பொருள்களின் மேல் விதிக்கப்படும் வரி அவமானத்திற்குரியது என்றும் அந்த வரியின் மூலம் பெறும் வருமானம் ''கறைபட்ட பணம்'' என்றும் கூறி இடித்துரைத்தார்.

அவர், மதுபானக்கடைகளின் முன்னால் அமைதியான முறையில் மறியல் நடத்தவும் ஏற்பாடு செய்தார். பெரிய

குடும்பத்தைச் சார்ந்த நூற்றுக் கணக்கான பெண்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெற்றிகரமாக மறியல் செய்தனர். அவர்களில் பலர் சிறையில் அடைக்கப் பட்டனர், தடியடிபட்டனர்; பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளாயினர்.

மகாத்மா காந்தியின் வழி காட்டுதலின்படி இயங்கிய காங்கிரஸ்கட்சி இந்தியாவின் ஏழு மாகாணங்களில் 1933-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு-ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது, மதுவிலக்கைச் செயல் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் துவக்கப்பட்டன.



## மதுவிலக்கும் அரசியல் அமைப்புச் சட்டமும்

இந்தியா 1947-ஆம் ஆண்டில் விடுதலை அடைந்தபோது-நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது 47-வது விதிமுறையில் மாநில அரசுக் கொள்கையின்கீழ் செயல்படுத்த வேண்டிய நெறிமுறைக் கோட்பாடுகளாகப் பின்கண்டவை அடங்கியிருந்தன.

''சத்துணவு கிடைக்கும் அளவையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல், மக்கள் நல்வாழ்வைத்தன் முதன்மையான கடமையாகக் கொண்டு மேம்படுத்துதல் ஆகியவற்றில் மாநிலம் கவனம் செலுத்தும். குறிப்பாக, உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடியதும் போதை ஏற்படுத்தக்கூடியதுமான மது மற்றும் போதைப் பொருள்களை அருந்துவதற்கு மருத்துவக் காரணங்களைத் தவிர- தடைச்சட்டம் கொண்டுவர மாநிலம் முழு அளவில் பாடுபடும்.

அதன்பயனாய், இந்திய யூனியனின் பல்வேறு மாநிலங்கள், தங்கள் தங்கள் பகுதியில் மது விலக்கைச் செயல்படுத்தப் பல் வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனால் ஒரு சில ஆண்டுகளிலேயே மதுவிலக்குக் கொள்கையில் குஜராத்- தவிர்த்த மற்றெல்லா மாநிலங்களிலும் உள்ளரிப்பு ஏற்பட்டது. குஜராத் தவிர்த்த மற்றெல்லா மாநிலமும் மதுவினால் கிடைக்கும் மாபெரும் வருவாய் கண்டு மலைத்து நின்று விட்டன. ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி அம்மாநிலங்கள் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தின. மதுவின்மூலம் மாநில அரசுக்குக் கிடைக்கும் ஒரு டாலர், மது அருந்துவோர்க்கு 4 டாலர் செலவை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இத்தொழிலில் இடைத்தரகர்களின் இலாபமும் இதர செலவினங்களும் அடங்கியுள்ளன. மதுவிலக்கைத் தளர்த்துவதால், குற்றங்கள், சாலை விபத்துக்கள், நோய்கள் முதலியன அதிகமாகக் கூடும். அவைகள் அரசின் நிதி நிலைமையில் நெருக்கடியையும், சுமையையும் ஏற்படுத்தும்.

முன்பே கூறியபடி, மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா வகையான மதுபானங்களையும் போதைப் பொருள்களையும் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தல், வைத்திருத்தல், குடித்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்குச் சட்டம் தடைவிதிக்கிறது. எரி சாராயம் தயாரிப்பதற்குப் பெரும் அடிப்படையாக உள்ள சில கச்சாப் பொருள்களைக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக அக்கச்சாப் பொருள்களின் மீது தேவையான கட்டுப்பாடுகளை விதிக்கவும் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மதுபானம் தயாரித்தல், அவைகளை ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல் முதலிய முக்கிய குற்றங்கள் ஜாமீனில் விடுதலை பெற முடியாத குற்றங்களாகக் கருதவும், மதுவிலக்குக் குற்றங்களை ஒட்டு மொத்தமாக விசாரித்துக் கடும் தண்டனை வழங்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினை வலியுறுத்திச் செயல்படுத்தும் பணி காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பனைப் பணி, புனித வினைமுறை, மருத்துவம் ஆகிய காரணங்களுக்காகவும் அயல் நாட்டினருக்காகவும் மது வழங்கும் உரிமம், அனுமதிச் சீட்டு வழங்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணி, பல்வேறு விதி மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ், அரசின் கலால் வரி, மதுவிலக்குப் பிரிவால் செயல்படுத்தப்படுகிறது. மது விலக்கு என்பது இந்த நாட்டிற்கே உரிய சட்டமாக இருப்பதால், எந்தக் குடிகாரருக்கும் எந்தத் தகுதியோ அல்லது மதிப்போ கொடுக்கப்படக்கூடாது என்பதே அரசின் கொள்கையாக உள்ளது.

பொதுவான கண்ணோட்டத்தில் பார்த்தாலும், மது அருந்த அனுமதிச் சீட்டுப் பெற்றுள்ளவர்கள்-அவர்கள் தொழில் அல்லது நிதி உலகில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தபோதிலும்-பொது மக்களிடமிருந்து ஒழுக்க நெறிக்குட்பட்ட கௌரவத்தையும், நம்பிக்கையையும் பெற முடியவில்லை.

## போதனை மற்றும் விளம்பரப் பணிகள்

மதுவிலக்குக்கொள்கை முக்கியமாகச் சமுதாய சீர்திருத்தக் கொள்கையாக இருப்பதால், மதுவிலக்குக் கொள்கையின் வெற்றி அது எந்த மக்களுக்காக உருவாக்கப்பட்டதோ, அந்த மக்கள் மனமுவந்து, இடையறாது அளிக்கும் ஒத்துழைப்பையே பெரிதும் பொறுத்திருக்கிறது. சட்டம் மட்டுமே, நாம் காண விரும்பும் முடிவை அளிக்க முடியாது. ஆகவேதான், மதுவிலக்கைப் பற்றிப் போதனை மற்றும் விளம்பரப் பணிகள் பல்வேறு சமுதாய நிறுவனங்களாலும், அறக்கட்டளைகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மதுவிலக்கினால் கிடைக்கும் சமூகப் பொருளாதாரப் பயன்கள்

பொருளாதார அடிப்படையில் நோக்கினால் இந்தியா வளர்ந்து வரும் ஒரு நாடாகவே உள்ளது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான மக்கள் ஏழைகளாகவே உள்ளனர். மதுவிலக்குத் திட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முந்திய காலத்தில், முன்னாள் குடிகாரர்கள் துயரமான வாழ்க்கையே நடத்தினர். குடிப்பழக்கம், அவர்களை, வீட்டிற்கு வேண்டிய சாதாரணத் தேவைகளைக்கூட அறிய முடியாத குருடர்களாக ஆக்கியது. சொத்துக்கள், துணி மணிகள், சமைக்கும் பாத்திரங்கள், கால்நடைகள் முதலியவற்றைக் குறைந்த விலையில் விற்கவோ அவைகளைக் கடுமை



யான வட்டி விகிதத்தில் அடகு வைக்கவோ அவர்கள் தயங்கியதில்லை. அவ்வாறு பெற்ற பணத்தைத் தங்கள் மது பான தாகத்தைத் தணித்துக் கொள்ளவே அவர்கள் பயன் படுத்தினர்.

குடிகாரன், தன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தன் மனைவியையும், குழந்தைகளையும் அடிக்கடி தொல்லைப் படுத்துகின்றான்.

தெருச்சண்டைகளும், குடித்து விட்டுச் சண்டை போடுதலும் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன. பெரும்பாலான குடிகாரர்களின் வாழ்விலும், சுற்றுப்புறச் சூழ்நிலையிலும் நிம்மதி குலைந்த நிலையே காணப்பட்டது.

முழு மதுவிலக்கு நிலவிய இருபத்தைந்து ஆண்டுகள், பொதுவாகச் சமுதாயத்தின் நிலைமைகளிலும், குறிப்பாக உழவர்கள், தொழிலாளர்கள், நலிந்த பிரிவினர்களிடையேயும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் குடிகாரர்களால், மதுபானங்களின் மீது முன்பு செலவு செய்யப்பட்டு வந்த பணம், தற்பொழுது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக அவர்களால் பயன்படுத்தப் பெறுகிறது. அவர்களில் பெரும்பாலோர் கடன் சுமையிலிருந்து விடுபட்டுள்ளனர்; அமைதியான குடும்ப வாழ்க்கையையும், சமுதாய வாழ்க்கையையும் பெற்றுள்ளனர். தெருக்களில் குடிகாரர்களைக் காண்பதும், குடிகாரர்கள் சாக்கடையில் விழுந்து புரள்வதும், குடித்துவிட்டுச் சண்டை போடுதலும் கடந்த கால நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன.

தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தைத் தற்பொழுது பயனுள்ள வகையில் செலவிடுகிறார்கள். உற்பத்தித் திறன் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உயர்ந்துள்ளது. தங்களுடைய கட்டுப்பாடு, திறமை ஆகியவற்றின் மூலம் தொழில்கள் செழிக்க அவர்கள் உதவியுள்ளனர். முன்பிருந்ததைவிடத் தற்பொழுது வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் குறைவாகவே உள்ளன. தொழிலாளர் உறவு மிகவும் சுமுகமாகவே உள்ளது. தொழிலாளர், பின்தங்கிய வகுப்பினர், ஏழை எளிய பிரிவினர் ஆகியோர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளுக்கும், நிலங்களுக்கும், சொந்தக்காரர்களாகி உள்ளனர். அவர்களுடைய பிள்ளைகள் எல்லா வகையான நல்ல கல்வியும் பெற்று வருகின்றனர். மது, தொழிலாளியை மிருகமாக்கியது. ஆனால் மதுவிலக்கு, தொழிலாளியை நல்ல குடிமகனாக ஆக்கியுள்ளது.

குற்றங்களின் விகிதமும், நோய்கள் தோன்றுவதும், சமூக விரோத நடவடிக்கைகளும் மிக மிகக் குறைந்து விட்டன.

## குடிவகைகள் கட்டுப்பாடும் மது விலக்கும்

பிரச்சாரம் மற்றும் போதனை மூலமாகவே, குடியினால் விளையும் கொடுமைகளிலிருந்து மனிதனைக் காப்பாற்ற முடியுமே தவிர, சட்டத்தின் மூலமாக அல்ல என்பது ஒரு கருத்தாகும். குடியின் தீமைகளை விளக்கும் பிரச்சாரம் இன்றியமையாததுதான். ஆனால் வெறும் பிரச்சாரத்தினால் விளைவது சிறு பயனே என்பதை அனுபவம் மெய்ப்பித்துள்ளது.

அமெரிக்காவில் மதுவிலக்கு வெற்றி பெறவில்லை என்று வாதாடப்படுகிறது. இத்தகைய பாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு மதுபானம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருஞ்செல்வர்கள் காரணம் என்று அண்மையில் நடைபெற்ற ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இலாபம் தேடுவதையே இலட்சியமாகக் கொண்ட இப்பெருஞ்செல்வர்கள் பத்திரிகைகளுக்குப் பெருமளவில் கையூட்டுக் கொடுத்துக் கடன், நிர்வாகத்தில் இலஞ்ச ஊழல் ஆகியவற்றை ஏற்படுத்தினர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. அமெரிக்காவில் இன்றைய நிலைமை என்ன? குடிப்பழக்கம் நாளுக்குநாள் அச்சுறுத்தும் விகிதத்தில் அதிகமாகி வருகிறது. அதன் விளைவாக, நோய்கள், ஒழுங்கற்ற நிலைமைமைகள், விபத்துக்கள், குற்றங்கள், மணவிலக்குகள் ஆகியவை வியப்பிற்குரிய வேகத்தில் மலையெனக் குவிகின்றன.

குடிப்பழக்கத்தினால் ஏற்படும் பேராபத்திற்கெதிராக உலகமெங்கும் பல மாநாடுகள் நடத்தப்படுகின்றன; விஞ்ஞானிகள், மருத்துவர்கள் மற்றும் பலர் புள்ளி விவரங்களை எடுத்துக்கூறி எச்சரிக்கை விடுக்கின்றனர். இவைகளின் முடிவு என்ன?

மதுவிலக்குப் பற்றி ஒரு முழுமையான திறனாய்வு நடத்தவும், கடந்த 10 ஆண்டுக் காலத்தில் நடைபெற்ற அனைத்துலக மாநாடுகளால் விளைந்த பயன்களை அறியவும் அனைத்து நாட்டு மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏற்பட்டுள்ள சில நன்மைகளை மட்டும் எடுத்துக் காட்டி நாம் மன நிறைவு அடையக் கூடாது. மொத்தத்தில் தற்பொழுதுள்ள நிலைமை, மிகவும் அதிர்ச்சியளிப்பதாகவே உள்ளது. குடிவெறி என்னும் பேய், நாகரிகத்தின் மேல் படையெடுத்து மேலும் மேலும் முன்னேறி வருகிறது. மனித உரிமை, உடைமைகளையும், மனித உயிரையும் கவர்வதே அதன் இலக்காக உள்ளது.

மனித இனத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படுவதற்கு முன்பு, இம்முக்கிய பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது.

# மகா கவியின் மகத்துவம்





அமரர்
எஸ். சத்தியமூர்த்தி

[அரை நூற்றுண்டிற்கு முன்னர், ஆங்கில ஏகாதிபத்தியத்தால் மகாகவி பாரதியாரின் பாடல்கள் தடை விதிக்கப்பெற்றுப் பறிமுதல் செய்யப்பட்ட பொழுது தீரர் சத்திய மூர்த்தி சட்ட மேலவையில் உணர்ச்சிப் பிழம்பாக நின்று பேசியது]

**மா**ண்புமிகு தலைவர் அவர்களே!

இந்த மசோதாவை ஆதரித்துப் பேசுவதற்கு எனக்கு முன்கூட்டிய அறிவிப்போ, விவரமான வாதங்களோ தேவையில்லை! இந்த அவையில் தமிழனாகவும் தமிழறிந்தவராகவும் தேசபக்தியுடையவராகவும், தேசபக்தியைக் கண்டு அஞ்சாதவராகவும் இருக்கின்ற எந்த ஒரு உறுப்பினரின் உணர்ச்சியையும் நான் பெரிது படுத்திக் காட்டுவதாக எண்ண வேண்டாம். சென்னை மாநில அரசு, காவல்துறையை விட்டு, பாரதியாரின் பாடல்களைப் பறிமுதல் செய்யும் முயற்சியை எதிர்த்துக் கொண்டுவரப்படும் இம்மசோதாவிற்கு ஆதரவாக எந்த ஒரு விளக்கமும் தேவையில்லை. எவ்வளவுதான் சென்னை மாநில அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தாலும், இந்த நாட்டில் எதுவரை தமிழ்மொழி வாழ்கின்றதோ, எதுவரை ஒரு தமிழனாவது வாழ்கின்றானே, அதுவரை மகாகவி பாரதியாரின் விலைமதிக்க முடியாத தேசபக்திப் பாடல்களும் இச் செந்தமிழ் மொழியில் நிலைத்து நிற்கும்!

தலைவர் அவர்களே!

மறைந்த இம்மகாகவியின் திருநாக்கிலேதான் சரஸ்வதி தேவியே தன் தேசபக்தி நடனங்களை நடத்திக் காட்டியிருக்கிறாள். பாரதி வேறெந்த சுதந்தர நாட்டிலே பிறந்திருந்தாலும், ஏன் சுதந்தரநாடு? இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலே பிறந்திருந்தாலும், அம்மகாகவி அந்தநாட்டினுடைய தேசிய கவியாக (Poet Laureate) அங்கீகரிக்கப்பட்டிருப்பான்! மக்களுடைய உணர்ச்சிகளை மதிக்கத் தெரிந்த அந்த நாடுகளில் பெரிய பட்டங்களையும் கௌரவங்களையும் பெற்றிருப்பான்! எல்லாக் கௌரவங்களையும் பெற்ற மனிதனாக வாழ்ந்தும், மறைந்துமிருப்பான். ஆனால், இந்த அடிமை நாட்டில் பிறந்த காரணத்தால், பாண்டிச்சேரியில் அடைக்கலம் புக நேரிட்டது. புதுச்சேரி அரசின் ஆதரவிலே வாழ்ந்த அவன் இந்த அடிமை நாட்டில் தன் வாழ்வு பயனற்றுப் போய்விட்டதை எண்ணி, இதயம் உடைந்து இறந்தான். பாரதிக்கு முன் இந்த நாட்டிலே வாழ்ந்த தியாகிகளும், தேச பக்தர்களும் அதே கதிக்குத்தான் ஆளானார்கள். சுப்பிரமணிய பாரதியார் வாழ்விலும் சாவிலும் தேசபக்தராகவே விளங்கினார்.

தலைவர் அவர்களே!

நான் மீண்டுமொருமுறை உங்கட்கு நினைவூட்ட விரும்புகின்றேன். தமிழிருக்கின்ற வரையில் கூட, அதிலுள்ள அனைத்து நூல்களையும் நீங்கள் பறிமுதல் செய்யலாம்! ஆனால், இன்றைக்கு நாங்கள் பெற்றிருக்கின்ற புனிதமான வேதங்கள் அனைத்தும் எப்படிப் பெற்றோம் தெரியுமா? தலைமுறை தலைமுறையாக, சகாப்தங்கள் சகாப்தங்களாக ஓர் அச்சுப் பிரதி கூட இன்றி, மெக்காலே மில்டனுடைய இழந்த சொர்க்கத்தின் (Paradise Lost) ஒவ்வொரு வரியையும் பார்க்காமலே சொல்வாராமே, அவ்வாறு எங்களுடைய மூதாதையர்களால் ஞாபகசக்தியின் மூலமாகவே எங்களுக்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. எனவே, எதுவரையில் இந்த நாட்டில் ஒரு தமிழனாவது வாழ்கின்றானே, அதுவரையில் பாரதியினுடைய விலை மதிக்கவொண்ணுப்பாடல்கள் தமிழனுடைய தனிச் சொத்தாகக் காக்கப்படும் என்ற நம்பிக்கையில் எனக்குச் சிறிதும் சந்தேகம் கிடையாது.

தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், துர்ப்போதனை செய்யப்பட்ட இந்த அரசின் நடவடிக்கையால், பாரதியினுடைய ஒவ்வொரு பாடலையும் அனைவரும் மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற பிரச்சார இயக்கத்தைத் துவங்கப் போகின்றோம் என்பதே! மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், உள்துறை அமைச்சர் அவர்களும் பாரதியினுடைய ஒவ்



வொரு சொல்லையும் கூடப் பறிமுதல் செய்யலாம். ஆனால், மனித அறிவு இன்னமும் மனப்பாடம் செய்யும் ஆற்றலையும், ஞாபக சக்தியையும் பறிமுதல் செய்யும் இயந்திரத்தைக் கண்டு பிடிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நினைவாற்றலும், எண்ணங்களும் என்றும் பெருகிக் கொண்டே இருக்கும். மாண்புமிகு சட்ட அமைச்சரும் உள்துறை அமைச்சரும் எங்கெங்குச் சென்றாலும் அங்கெல்லாம் பாரதியாருடைய பாடல்கள் முழங்கப்படுவதைத் தான் கேட்க நேரும். அந்த வீரமிக்க தேசபக்திப் பாடல்களைக் கேட்பதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்பிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ள விரும்பினால் அவர்கள் தங்கள் செவிகளில் பஞ்சை வைத்துத் தான் பொத்திக் கொள்ள வேண்டும்.

தலைவர் அவர்களே! எங்களுடைய பிரச்சாரத்தின் தொடக்கம் உங்கட்கு அன்புப் பரிசு கூட வன்று! இந்த அரசு, தேச பக்திப் பாடல்களை நிறையப் பெற்ற, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களை ஆளுகின்ற அரசு! இருபத்தைந்து ஆண்டுகளாக, இப்பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பாடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தமிழ் மாணவர் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்கள் இப்பாடல்களை இதுவரை கேட்டு மகிழவில்லை என்றால்—இப்பாடல்களைக் கேட்டு அவரது இதயம் துடிக்கவில்லையென்றால் - நாடி நரம்புகளிலுள்ள இரத்தம் சூடேறவில்லை என்றால், ஆத்மாவை உருக்கும் அம்மகத்தான பாடல்களை ஒருமுறை கேட்க வேண்டுகிறேன். சமீபத்தில் கட்சி மாறிய எனது இரண்டு நண்பர்கள் இப்பொழுது இங்கு இல்லையே என்று வருந்துகின்றேன்; அவர்கள் இங்கு இருப்பார்களேயானால் என்னுடைய கருத்துக்கு மாறுபடமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வென்று இந்த அவைக்கு வந்ததற்கும், பின்னர் கட்சிமாறி அமைச்சர்கள் ஆனதற்கும் காரணம் சில தேர்தல் தந்திரங்களே! அத்தந்திரங்களில் ஒன்று தேர்தல் பிரச்சார மேடைகளில் சின்னப் பையன்களையும், பெண்களையும் கொண்டு இந்தத் தேசபக்திப் பாடல்களைப் பாட வைத்தது ஆகும். உங்கட்கு ஒன்று தெரியுமா? தமிழ் நாட்டிலே நீங்கள் ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தைப்பெற வேண்டுமென்றால், அவையினரின் உற்சாகத்தைத் தட்டி எழுப்ப வேண்டுமென்றால் அதற்குரிய சுலபமான வழி, இந்த தேச பக்திப் பாடல்களைப் பாடச் செய்வதே ஆகும். எனக்குப் பாடக்கூடிய குரல் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர் போன்றோரின் கல் மனத்தைக் கூட உருக்கக்கூடிய தேச பக்திப் பாடல்களின் சில வரிகளைப் பாடிக் காட்ட விரும்புகின்றேன். இப்பாடல்களை உரைநடை போன்று படித்தால் கூட அவை உங்களுடைய கல்மனத்தையும் உருக்கும்.

தலைவர் அவர்களே !

இப்பாடல்கள் என்ன சொல்லுகின்றன? உங்களுடைய ஆணையின் கீழ் அப்பாடல்களின் புரட்சிகரமான போக்கைப் பற்றிச் சொல்லப் போவதில்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆங்கில இலக்கியத்தில் தேசியத்தைப் பற்றிய கவிதைகள் என்ன சொல்லுகின்றனவோ-அத்தேசத்தின் இயற்கை அழகினைப் பற்றி எப்படிப் பேசுகின்றனவோ—தேசத் தலைவர்களையும் அவர்களது வெற்றியையும் பற்றி என்ன பாடுகின்றனவோ—தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றி எப்படிக் கனவு காணுகின்றனவோ அப்படித்தான் பாரதியாரும் பாடியுள்ளார் என்பதைத் தான் இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். அப்பாடல்களின் படிகளை இங்கு நான் வைத்திருக்கிறேன். அப்பிரதிகளைச் சட்ட அமைச்சர் அவர்கட்கும், உள்துறை அமைச்சர் அவர்கட்கும் பரிசளிக்க விரும்புகின்றேன். அத்துடன், சட்டமன்ற நூலகத்திற்கும் ஒன்றை அன்பளிப்பாக அளிக்க விரும்புகின்றேன். காவல் துறையினர்க்குத் தேவைப்பட்டாலும், அதிலிருந்து தேடி எடுத்துக் கொள்ளலாம். அரசு இப்பாடல்களைத் தடை செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதற்காகச் சில பாடல்களைப் படிக்க விரும்புகின்றேன்.

''வந்தே மாதரம் என்போம்
எங்கள்
மாநிலத்தாயை வணங்குதும்
என்போம் (வந்தே)

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜென்மம் இத்தேசத்தில் எய்தின
ராயின்
வேதியராயினும் ஒன்றே-அன்றி
வேறு குலத்தினராயினும்
ஒன்றே (வந்தே)

ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர்
அன்றோ?
சீனத்த ராய் விடுவாரோ?—பிற
தேசத்தவர் போற்பல
தீங்கிழைப்பாரோ (வந்தே)

ஒன்றுபட்டால் உண்டு—வாழ்வே
— நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும்
தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்
வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது
வேண்டும்'' (வந்தே)''

* * * *

செந்தமிழ் நாடெனும்
போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே
(செந்)

அவைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ இருக்கும் எந்தத் தமிழனாவது இப்பாடலைக் கேட்டு தன் இதயம் உருகாமல் இருப்பானா? மாட்சிமை தங்கிய தலைவர் அவர்களே! இத்தகைய பாடல்களைத் தாம் இந்த அரசு தடை செய்திருக்கிறது. இன்றைக்கு இங்கே சில பேர் ஆட்சியில் அமர்ந்திருப்பது இந்தப் பாடலால்தான்! இப்பாடல்களின் ஓசைநயம் மிகவும் உயர்ந்தது. என்னைப்போல தட்டுத்தடுமாறிப் படிப்பவன்கூட உங்களைக் கவர முடிகிறதென்றால் இப்பாடல்களின் இசையே காரணம்.

நேற்றைய தினம் மாண்புமிகு சட்ட அமைச்சர் இங்கு சப்தம் போட்டதை நானும் கவனித்தேன். அவர் ஒருமுறைகூட இப்பாடல்களைப் படிக்காமல் தடை செய்து விட்டார். இப்பாடல்களில் ஏதாவதொன்றை அல்லது இரண்டை எடுத்துத் தடை செய்திருந்தால் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் அப்படி நீங்கள் செய்யவில்லை. இந்த இரண்டு தொகுதிகளும் தேச பக்திக்கு மட்டுமின்றி, நம்முடைய மதம், இலக்கியம் போன்றவற்றைப் பற்றிய உருக்கமான பாடல்களையும் கொண்டிருக்கின்றன.



**ஆங்கிலேயர் பாடியது என்ன ?**

சில ஆங்கிலக் கவிஞர்களுடைய கவிதைகளைக் கோடிட்டுக் காட்டி விட்டு என் பேச்சை முடிக்க விரும்புகின்றேன். இப்பாடல்கள் இங்கிலாந்திலே பாடப்படுகின்றன. இந்தியாவிலேயும் விருந்து வைபவங்களிலும், மற்ற இடங்களிலேயும் பாடப்படுகின்றன. அவை இங்கிலாந்து தேசத்தின் பெருமையைப் பாடுகின்றன. ''பிரிட்டன் ஒரு பொழுதும் அடிமையாகாது; இந்தியர்கள் எப்பொழுதும் அடிமைகளே!' எல்லா இடங்களையும் பிரிட்டனே ஆளவேண்டும்!'' அப்பாடல்களின் இலட்சியங்களை வைத்து அவற்றை மதிப்பிட்டால் அவை ஒரு பெரும் சுமையே!

டென்னிசன் பாடினன்:

இங்கிலாந்தினுடைய
இடுப்பிலே தான்
கிழக்கிற்கும் - மேற்கிற்குமுரிய
பொற்சாவிகள் தொங்கு
கின்றன
உலகைச் சுற்றிவந்த
அவளுடைய
பொற்கரங்களிலே, சுழலும்
சாவிகளில்
உலகநாடுகளின் தலைவிதிகள்
தொங்குகின்றன.

வில்லியம் பிளேக் எழுதுகிருன்:
''அவர்களுடைய இறக்கைகள்
கிழக்கு மேற்காய் விரிந்திருக்கின்
றன,
அவர்களின் கூடு நடுக்கடலில்
மிதக்கின்றது
ஆனல் இரைதேடும்
கழுகினைப் போல
அவர்கள் எங்கும் பறக்கின்
றனர்.

'பார்க்கர்' பாடுகிருன்.

வீரமும் தைரியமும் பொருந்
திய மாலுமிகளே!
தளர்ந்து விடாதீர்கள்,
புயலடித்தபோதும்!
பொன்னையே தேடுங்கள்.

லார்ட் டென்னிசனும்

''கப்பற்படையே உன் தலை
விதி'' என்கிருன்.

ஆங்கில தேசிய இலக்கியத்திற்கும் எங்களுடைய இலக்கியத்திற்கும் இடையேயுள்ள மூன்று தலையாய வேறுபாடுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆங்கில தேசிய இலக்கியம் தன்னுடைய நாட்டின் பெருமைகளைப் பேசுவதோடு எதிரிகளுடைய குழப்பத்தையும் அழிவையும் கூடப் பேசுகின்றன. ''ஆண்டவன் அரசனைக் காப்பாற்றுகின்ருன். அதனல் எதிரிகளைக் குழப்பி வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் கொண்டு வந்து குவியுங்கள்'' இதுதான் ஆங்கிலேயரின் பாட்டு.

ஆங்கிலேயரின் பார்வையில் இரண்டே இரண்டு வகை மனிதர்தர்கள் தாம் உண்டு (1) இங்கிலாந்தும் அதனுடைய மனிதர்களும் (2) அதனுடைய எதிரிகள் மறுபுறம். கடவுள், தனது மற்ற கடமைகளையெல்லாம் விட்டு விட்டு இங்கிலாந்தைத் தொடர்ந்து காப்பாற்றுவதோடு அதனுடைய எதிரிகளையும் குழப்ப வேண்டும். இங்கிலாந்தினுடைய பார்வையில் இந்த இரண்டு வகை மனித்ர்கள் தாம். ஆனல் பாரதியாரோ எல்லா வகை மனிதருக்கும், எல்லாக் கவிஞர்களுக்கும் எல்லாத் தத்துவ ஞானிகளுக்கும், எல்லா தீர்க்க தரிசிகளுக்கும் உடையவனுவான்.

இந்தியா சுதந்தரமடைந்து மகிழ்ச்சியாய் இருக்கட்டும், மற்ற நாடுகளும் விடுதலை பெற்று மகிழட்டும்! தேசியம், தேச பக்தியில் ஆண, ஆவன்ன கூடத் தெரியாத சென்னை அரசாங்கம் தனது அழுக்குக் கரங்களை வைத்து புனிதமான நூலை அசுத்தப் படுத்துவதற்குத்தான பாரதி உலக சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பற்றிப் போதித்தான்? பாரதி பிறப்பால் ஓர் அந்தணன்! நான் தெற்கே வாழ்கின்ற மற்ற ஜாதிக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாரதியாருடைய பாடல்களில் எங்கேயாவது - ஓரிடத்திலாவது - வகுப்புத் துவேஷத்தையோ, உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டையோ காட்ட முடியுமா? பாரதியாருடைய நண்பர்களில் பலர் இதர ஜாதிக்காரர்களே! அவர்களின் பெயர்களை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்பவில்லை. பாரதி எல்லோரையும் இந்தியர்களாகவே பார்த்தான். வகுப்பு வேறுபாடோ-மத வேறுபாடோ-இன வேறுபாடோ அவன் பாடல்களில் கிடையாது. இன்றைக்கு வாழ்கின்ற புலவர்களில் அவன்தான் மிகப் பெரிய சீர்திருத்தவாதி. இன்றைக்கு அவனது பாடல்களைப் பறிமுதல் செய்கின்ற மனிதர்களுக்கு, அவனது சகோதரத்துவமும், ஒருமைப்பாடும் பயன்படவில்லையா? இன்றைக்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை எந்த விதத்தில் பார்த்தாலும் நியாயமாகாது. (Poet Laureate) ஆஸ்தான கவிஞன். இங்கிலாந்து நாட்டிலே ஒரு கவிஞனுக்குக் கொடுக்கப்படும் மிகப் பெரிய பதவி)

**கட்டுரையின் தமிழாக்கம்:**

**—தி. ராஜகோபால்.**

## அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ்?

**ரா**ஜாஜி 1962-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பொழுது, ஜனதிபதி கென்னடியைச் சந்திப்பதற்காக வெள்ளை மாளிகையின் முன் அறையில் அமர்ந்திருந்தார்.

ஒரு சில நிமிடங்களில் விறுவிறு என்று உள்ளே நுழைந்த ஓர் இளைஞர், ராஜாஜியுடன் கை குலுக்கினர்; பின்னர் அவரை ஜனதிபதியின் அறைக்கு அழைத்துச் சென்ருர்.

பிரம்மாண்டமான ஜனதிபதியின் அறை காலியாக இருந்தது. தமக்காகக் கென்னடி உள்ளே காத்துக் கொண்டு இருப்பார் என்று எண்ணிய ராஜாஜி, அங்கு யாரும் இல்லாமற் போகவே, தம்மை அழைத்து வந்தவரை நிமிர்ந்து பார்த்தார்.

அவ்வளவுதான்! ராஜாஜி அதிர்ச்சி அடைந்து விட்டார்! கென்னடியின் மெய்ப்பாதுகாப்பாளரோ, அந்தரங்கக்காரியதரிசியோ தான் தம்மை அழைத்து வந்தவர் எனக் கருதியிருந்த ராஜாஜி, ''நான் அமெரிக்க ஜனதிபதியின் சமூகத்திலா இப்போது இருக்கிறேன்?'' என்று உணர்ச்சி ததும்பக் கேட்டார்.

வயதுக்கும், அறிவுக்கும் மரியாதை செய்ய எண்ணிய இளம் ஜனதிபதி பணிவோடும், பண்போடும், அன்போடும் தாமே வெளியே வந்து ராஜாஜியை அழைத்துச் சென்ற செய்தியை ரஷ்யாவில் முன்னர் இந்தியத் தூதராக இருந்த திரு. கே. பி. எஸ். மேனன், ஐ.சி.எஸ். 'ஸ்டேட்ஸ்மன்' 1-5-1966 இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டு இருக்கின்ருர்.

# மகாத்மாவின் மனச்சாட்சிக் காவலர்

—பியாரேலால்

[திரு பியாரேலால் பல்லாண்டுகள் காந்திஜியின் அந்தரங்கக் காரியதரிசியாக அரும்பணி ஆற்றி, அடிகளின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அண்ணலிடம் இருந்த தொடர்பு காரணமாகச் சுதந்திரப் போராட்டப் பெருந்தலைவர்கள் அனைவருடனும் நெருங்கிப் பழகிய திரு. பியாரேலால் இக்கட்டுரையில் ராஜாஜியிடம் தமக்குள்ள பேரன்பையும் பெரு மதிப்பையும் வெளியிடுகிறார்.]

என்னைப் பொறுத்தமட்டில் ராஜாஜி ஒரு தனி மனிதருக்கு மேம்பட்டவர்; அவரே ஒரு ஸ்தாபனம். அவர் முப்பதாண்டுக் காலத்தில் காந்திஜியிடமிருந்து கருத்து மாறுபாடு கொண்ட போதெல்லாம் நான் அவரைப் பின்பற்றவில்லை. ஆயினும் ராஜாஜியை விடுத்து காந்திஜியையோ, நமது சத்தியாக்கிரகச் சுதந்திரப் போராட்டத்தையோ என்னால் நினைக்கவும் முடியவில்லை.

'ஸி. ஆர்.' என்ற மனிதர் அவர் வெளியிடும் கருத்துக்களை விட உயர்ந்தவர்; அவர் வகித்த பெரும் பதவிகளைவிட உயர்ந்தவர். அவரது அரசியல் சேவையின் சரிதம் மிக உயர்ந்தது. ஆனால் 'ஸி. ஆர்.' என்ற மனிதரோ அந்தச் சேவையைவிடவும் உயர்ந்தவர்.

அவரது சிந்தனை ஸ்படிகம் போல் தெளிந்தது; அவரது புத்தி, கூர்வாள்போல் தீட்சண்யமானது. அவரது வாதம் வெல்லவொண்ணாதது; பொருளைப் பகுத்து ஆராய்வதில் அவர் பெரும் ஆற்றல் பெற்றவர்; விவாதத்தில் அவரைக் கலங்கச் செய்ய முடியாது—இதையெல்லாம் அறியாதார் யார்? அவரது அறிவொளி கனிந்த நகைச்சுவை பற்றியும், எதிராளியை வாடி விழச் செய்யும் குத்தல் பேச்சுப் பற்றியும் அறியாதார் இல்லை. ஆனால் அவரது இயல்பிலுள்ள அன்பின் இதமான கதகதப்பைப் பலர் அறியவில்லை என்றே அஞ்சுகிறேன். அவரது இதயம் அன்பு மயமானது. அவரது அனுதாபம் அகன்று விரிந்தது; உள்ளுக்குள் அவர் மிகவும் மென்மையும், நுட்பமும் பொருந்தியவர். வெளிப் பார்வைக்கு அவர் வாஞ்சையற்றவர் போல் தோன்றியிருக்கக் கூடும். ஆனால் தமது நுட்பமான அந்தரங்கத்துக்குக் காப்பாகவே அவர் இப்படிப்பட்டதொரு கவசத்தைப் போட்டுக் கொண்டிருந்தார். காந்திஜியின் பணியில் நான் ஈடுபட்டது முதல் பலப் பல ஆண்டுகள், வீட்டுப் பெரியவர்களுக்குக் குழந்தை சேவை செய்வதுபோல் ராஜாஜிக்குச் சேவை செய்திருக்கிறேன். அவரது அன்பையும் விசுவாசத்தையும், விவேகமான அறிவுரையையும் ஏராளமாகப் பெற்றிருக்கிறேன். இந்த அனுபவங்களில் அடைந்த தூய ஆனந்தத்தை என்னால் என்றும் மறக்க முடியாது.

ராஜாஜிக்குத் தீவிரமான ஆஸ்துமா இருந்தது. நான் அறிந்த மட்டில், மருந்துகள் ஏதுமின்றித் தமது இரும்பை நிகர்த்த திடசங்கற்பத்தாலும் தயை தாட்சண்யமின்றி ஒழுக்கக் கட்டுப்பாடுகளை அனுசரித்ததாலுமே ஆஸ்துமாவைக் குணமாக்கிக் கொண்ட ஒரே ஒருவர் ராஜாஜிதான்.

காந்திஜி தமது ''மனச்சாட்சியின் காவலர்கள்'' என்று கருதிய பலரை எப்போதும் தம்முடன் வைத்திருப்பார். அவர்களில் ராஜாஜி முதல் ஸ்தானம் பெற்றவர். காரணம், அவரது வெண்பனிபோன்ற தூய நடத்தையும், சத்தியத்தில் அவருக்கு உள்ள தீவிரப் பற்றும், பரிபூரணமாக ஆன்ம அர்ப்பணம் செய்துகொள்ளும் அவரது இயல்புமே.

ராஜாஜியின் வாழ்க்கை மிக எளிமையானது; தெய்வத்துக்கு அஞ்சி நடத்தப்பட்ட அவ்வாழ்க்கை நன்கு வரையறை செய்யப்பட்டது, அதன் பலனாக தள்ளாத வயதிலும் அவர் சலியாத உழைப்புத் திறனும், சக்தி வாய்ந்த அறிவுத் திறனும், சோர்வுறாத உடல்—மனத் திட்பமும் பெற்று ஆதரிசமாக விளங்கினார். குறிப்பாக இளைஞர்கள் அவரது சீலத்தைப் பின்பற்ற வேண்டும்.

## ராஜாஜியின் யோசனை!


சென்னையில் நாள்தோறும் 'தசாவதாரம்' நாடகம் நடந்து கொண்டிருந்த காலம். ராஜாஜி அவர்கள் தமிழ் நாட்டு முதல்வராக இருந்த பொழுது, நாடகம் பார்க்க வந்திருந்தார்.


இடைவேளைக்குப் பிறகு மேடைக்குள் வந்து, தனியாக என்னை அழைத்து ராஜாஜி அவர்கள் சொன்னார்: ''நரசிம்மாவதாரத்தோடு 'இன்டர்வெல்' விடுகிறீர்கள். பயங்கரமான நரசிம்ம உருவத்தில் மகாவிஷ்ணு தோன்றி, இரணியனைக் கிழித்து எறிகிற ஒரு கோரக் காட்சியோடு இடைவேளையை முடிக்காதீர்கள்! அதைவிடப் பக்தன் பிரகலாதனின் வேண்டுகோளுக்குத் திருமால் இணங்கித் தன்னுடைய பயங்கர உருவத்தை மாற்றிக் கொண்டு, சாந்த சொரூபியாகக் காட்சி தருவது போல் முடிப்பது நல்ல முடிவாக நான் கருதுகிறேன். நாடகம் பார்ப்பவர்களுக்கும் அந்த மாறுதல் மனநிறைவைத் தரும்''.

ராஜாஜி அவர்களின் யோசனையை உடனே நான் ஏற்றுக்கொண்டு, மறுநாள் நாடகத்திலேயே அந்த மாறுதலைச் செய்தேன். அடுத்த நாள் இடைவேளை விடுவதற்குச் சற்று முன்னால் ராஜாஜி அவர்கள் நாடகம் பார்க்க வந்திருந்து, நான் அந்த மாறுதலைச் செய்திருக்கிறேனா என்று கவனிப்பது போல் அந்தக் காட்சி முடியும் வரை நாடகம் பார்த்தபின் திருப்தியோடு கிளம்பிச் சென்றார்.

—நவாப் ராஜமாணிக்கம்.

# பெரு சேதம்!





**தமிழ்நாடு பரிசுச் சீட்டு அளிக்கும் சிறப்புக் குலுக்கல் மூலம் கிடைக்கும் வருவாய் தமிழ்நாடு வெள்ளம் மற்றும் புயல் நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்.**

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ஒரு நல்வாழ்வுத் திட்டம். சமீபத்தில் இம்மாநிலத்தில் இயற்கையின் சீற்றத்திற்குள்ளாகித் தவிக்கும் எண்ணற்றவர்களுக்கு நிவாரணமளிப்பது இன்றைய அவசரத் தேவையாகும். இதற்கென இந்தச் சிறப்புக் குலுக்கல் மூலம் கிடைக்கும் வருவாய் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டை வாங்குங்கள்! துன்பத்திற்கு ஆளான அனைவருக்கும் இதன் மூலம் உதவிடுங்கள்!!

**2 சிறப்பு முதல் பரிசுகள் ஒவ்வொன்றும்**

ரூ. **5,00,000** வீதம்

**3 சிறப்பு இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1,00,000 வீதம்**

**இதைத் தவிர ஒவ்வொரு வரிசைக்கும்**

ரூ. **50,000** வீதம் இரண்டு முதல் பரிசுகள். மற்றும் பல பரிசுகள்!


**குலுக்கல் தேதி 21-1-1978**

பரிசுச் சீட்டின் விலை ரூ. 1 மட்டுமே.

10 வரிசைகள்





இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை 600 002



# நாடகத்திற்கு ஒரு சங்கரதாசர்

—மாண்புமிகு செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன்.




"சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்த நாள் விழாவைத் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கொண்டாட வேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் விரும்பினார்கள். அதன்படி இந்த விழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

''தமிழக அரசு புதிய வரலாற்றைப் படைக்க எண்ணிச் செயல்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது.

''வ.உ.சி., தேசீயக் கவிஞர் பாரதி ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களையும் கொண்டாடியுள்ளது. அவர்கள் எல்லாம் எந்தக் கட்சிக்காரர்கள் என்று இந்த அரசு பார்க்கவில்லை; அவர்கள் என்ன சட்டை அணிந்திருந்தார்கள் என்றும் இந்த அரசு கவலைப்படவில்லை.

''இந்த நாட்டுக்காக —இந்த மண்ணுக்காகப் பாடுபட்டவர்களின் புகழைப் பாட வேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

''நாடகத்திற்கு இலக்கணம் வகுக்க ஆள் இல்லாமல் இருந்த காலத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் தோன்றினார். இயல், இசை, நாடகத்திற்காகப் பாடுபட்டார்.

"நாடகத்திற்காகப் பாடுபட்ட சம்பந்த முதலியார் அவர்கள் பிறந்த நாளையும் தமிழக அரசு கொண்டாட விருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

''கட்சி வேற்றுமைகள், பாகுபாடுகள் ஆகியவற்றை மறந்து

இந்த அரசு செயல்படும்—என்றைக்காவது தேர்தல் வருகின்றபோது வேண்டுமானால் கட்சியைப் பற்றிய எண்ணம் வரட்டும்.

**''தமிழனை, தமிழன் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; இந்த எண்ணத்தைத் தமிழ் மண்ணில் நாம் விதைத்தாக வேண்டும்.**

''பாரதியா! பாரதிதாசனா? பெரியாரா? அண்ணாவா? என்றெல்லாம் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

**''பெரியார் இல்லை என்றால், அண்ணா இல்லை! காந்தியடிகள் இல்லை என்றால் பெரியார் இல்லை!**


''நமக்குள்ளே இருக்கும் இடைவெளிகள்—அபிப்பிராய பேதங்கள் மறையட்டும். ஒருவரை ஒருவர் பார்க்கும்போது முறைத்துப் பார்க்கும் பழக்கம் நீங்கட்டும்; இந்த மாற்றம் ஏற்பட வேண்டும் என்றுதான் பேரறிஞர் அண்ணா பாடுபட்டார்.

''இங்கே அமர்ந்திருக்கும் ம. பொ. சி. அவர்களுடைய தமிழ்த் தொண்டு தெரிகிறதே தவிர — தமிழ் மொழிக்காக ஒருவராகவாவது இருந்து பாடுபட வேண்டும் என்பதுதான் தெரிகிறதே தவிர—அவரது சட்டை என்ன என்பது எனக்கோ, நமது முதலமைச்சருக்கோ தெரியவில்லை.

''இன்று நாடக உலகில் மேடை வித்தைகள் மாறி இருக்கலாம். காட்சி அமைப்புகளில் எவ்வளவோ விநோதங்கள் உருவாகி இருக்கலாம். ஆனாலும், சங்கரதாஸ் சுவாமிகள் இல்லை என்றால் நாடகமே இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

''எனக்கு நேரடியாக சங்கரதாஸ் சுவாமிகளிடம் பழக்கம் கிடையாது. திரு டி. கே. சண்முகம் அண்ணாச்சி அவர்களின் நாடக மன்றத்தில் சேர்ந்து, நானும் ஒரு நடிகராக இருந்த காலத்தில், அண்ணாச்சி அவர்கள் சங்கர தாஸ் சுவாமிகளைப் பற்றி அடிக்கடி தெரிவித்த அருங்கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றிருந்தேன்.

''சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் பேராற்றல் பெற்றவை. அவை, கல்லூரிகளிலே—பள்ளிகளிலே—பாடப் புத்தகங்களாக வைக்கப்பட வேண்டியவை. எனது 13-வது வயதிலே அவரது வசனத்தைப் பயிற்றுவிக்கப்பட்ட அந்த ஒரே ஒரு தகுதிதான், அந்தப் பெருமகனாரிடம் நான் பெற்ற தகுதி.



**தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் ஆண்டு விழாவையொட்டி, சென்னை இராஜாஜி மண்டபத்தில், மறைந்த நாடகத் தந்தை திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் தமிழ்நாடு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு நீதிபதி திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன், திரு ம. பொ. சிவஞானம், திரு சகஸ்ரநாமம், திரு டி. வி. நாராயணசாமி ஆகியோர் அருகே உள்ளனர்.**

''டி. கே. எஸ். அண்ணாச்சி அவர்களைக் கதாநாயகனாக நடிக்க வைப்பதற்காக ஒரே இரவில் 'வீர அபிமன்யு' என்ற நாடகத்தை அமைத்தார் சங்கரதாஸ் சுவாமிகள். அவரைப் போலவே, 1945-ல் நடிப்பிசைப் புலவர் திரு கே. ஆர். ராமசாமி அவர்கள் நொந்துபோய் இருந்த காலத்தில் அவருக்காக, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரே இரவில் ஒரு நாடகத்தை உருவாக்கித்தந்து, அந்நாடகத்திற்கு 'ஓர் இரவு' என்று பெயரும் சூட்டினார். இந்த வகையில் சங்கரதாஸ் சுவாமிகளுக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் ஒற்றுமை இருக்கிறது.

''எங்கிருந்தாலும் வாழ்க'' என்று ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அவ்வுரையைப் பொன்னுரையாக கருதித் தமிழகஅரசு செயல்பட்டு வருகிறது.

''கடந்த மாதம் 30-ஆம் தேதி தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாளைத் தமிழக அரசு கொண்டாடியது; இத்தகைய நல்ல உணர்வுகள் — இலட்சியங்கள்-நமது முதலமைச்சரின் கொள்கைகளாகும்.

அரசியல் வேறுபாடுகளை மறந்து, **''யாதும் ஊரே, யாவரும் கேளிர்''** என்ற இலட்சியத்தை மதிப்பது தமிழகத்தின் கொள்கையாக இருக்க வேண்டும்.

''தனி நாடகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சங்கம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்த நாளைத் தக்க விதத்தில் கொண்டாட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்''.

*[சென்னை இராஜாஜி மண்டபத்தில் 14-11-77 அன்று நடைபெற்ற சங்கரதாஸ் சுவாமிகளின் 110-வது பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....]*

# சங்கரதாஸ் சுவாமிகளின் வரலாறு

தமிழக வரலாற்றிலே தலையாய இடம்பெற்ற வ.உ. சிதம்பரனார், பாட்டுக்கொரு புலவன் பாரதியார் ஆகியோர் பிறந்த திருநெல்வேலி மாவட்டத்தில் துறைமுக நகரமான தூத்துக்குடியில் 1867-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ஆம் நாளில் சங்கரதாஸ் சுவாமிகள் தோன்றினார்.

இவரது தந்தையார் தாமோதரக் கணக்குப் பிள்ளை ஒரு தமிழ்ப் புலவர் ; அவரது இலக்கிய அறிவு, 'இராமாயணப் புலவர்' என்னும் சிறப்புப் பெயரை அவருக்குத் தேடித் தந்திருந்தது. ஊரெல்லாம் போற்றும் தம் தந்தையிடமே தமிழ்க் கல்வி பயிலத் தொடங்கினார் சங்கரதாஸ்.

பின்னர், 'புலவரேறு' என்று அறிஞர்களால் போற்றப்பட்ட பழனி தண்டபாணி சுவாமிகளிடம் பாடம் கேட்டுத் தமிழறிவை அவர் வளர்த்துக் கொண்டார்.

இலக்கிய ஆர்வம் மிக்க சுவாமிகள் தூத்துக்குடியில் உப்புப் பண்டகசாலையில் சில காலம் கணக்கராக வேலை பார்த்து வந்தார் என்னும் செய்தி வியப்பாக இருக்கிறது.

பதினாறுவது வயதிலேயே வெண்பா, கலித்துறை, இசைப் பாடல்கள் முதலியவற்றை எழுதத் தொடங்கினார். கவிதைக்கும், கணக்கு வேலைக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் கவிதையே வென்றது! நாடகத் துறைக்கு சுவாமிகளை அழைத்து வந்தது! அப்போது அவருக்கு வயது 24.

நாடக நடிகராக வாழ்க்கையைத் துவக்கம் செய்தவர், பின்னர் நாடக ஆசிரியராகவும் ஆனார். சிறிது காலம் நாடக இயக்குநராகவும் பணியாற்றினார். நாடகம் குறித்தும், நாடக நுணுக்கம் குறித்தும் நாடகத்தில் சொல்லப்பட்டுள்ள நீதி குறித்தும் அவர் அப்போது ஆற்றி வந்த விரிவுரையைக் கேட்டு மக்கள் அமோகமான பாராட்டுக்களை வழங்கி வந்தார்கள்.

சுவாமிகளால் உருவாக்கப்பட்ட சீடர்கள் தமிழ் நாடக உலகிலும், திரை உலகிலும் பெரும் புகழ் பெற்றுத் திகழ்கிறார்கள். காலம் சென்ற மதுரை மாரியப்ப சுவாமிகள், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், டி.கே. எஸ். சகோதரர்கள் ஆகியோர் சுவாமிகளின் சீடர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தந்தை பெரியார் அவர்களுக்கும், சுவாமிகளுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. திடீரென்று வாழ்க்கையை வெறுத்துத் துறவியான பெரியாரைப் போலவே, சுவாமிகளும் சிறிது காலம் வாழ்வை வெறுத்துத் துறவியாக மாறினார்; அப்போதுதான் சுவாமிகள் என்ற அடைமொழி அவரை ஒட்டிக் கொண்டது. பின்னர் பல நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று, தந்தை பெரியார் இல்லம் திரும்பியதைப் போலவே, சுவாமிகளும் நாடக உலகத்துக்குத் திரும்பி வந்துவிட்டார் ; மறுபடியும் நாடக ஆக்கங்களைத் தொடர்ந்தார்.

அத்தகைய ஆற்றல் மிக்க நாடகாசிரியரின் 110-வது பிறந்த நாள் விழா, தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் 14-11-77 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது இவ்விழாவிற்கு மாண்புமிகு நீதிபதி திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினார்.

அவ்விழாவில் மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், சங்கரதாஸ் சுவாமிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து சங்கரதாஸ் சுவாமிகள் ஆற்றிய பணிகளைப் பற்றிப் பாராட்டிப் பேசினார்.

# சங்கரதாஸ் சுவாமிகளின் புலமை!

கோவலன் நாடகத்தை முதன்முறை மதுரையில் அரங்கேற்றியபோது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி சுவாமிகளின் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. 'கோவலன்' நாடகக் கதை எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் விளக்கமாகக் குறிப்பிட வேண்டியதில்லை. கண்ணகி கொடுத்த காற் சிலம்பை விற்று வர மதுரை நகருக்குப் போவதாகக் கூறுகிறான் கோவலன். அப்போது கண்ணகியின் வாய்மொழியாக,

''மாபாவியோர் கூடிவாழும்
மதுரைக்கு
மன்னா போகாதீர் இன்று''.

என்ற பாடல் பாடப்படுகின்றது. மதுரை நகரில், மதுரை மக்களின் முன்னிலையிலேயே ''மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்குப் போக வேண்டாம்'' என்று பாடினால் அவர்கள் மனம் எப்படி இருக்கும்? இந்தப் பாடலைப் பாடத் தொடங்கியதும் சபையோர் கூச்சலிட்டு, ''எங்கே சங்கரதாசர்? கொண்டு வா மேடைக்கு!'' என்று ஆரவாரம் செய்தார்கள்.

சுவாமிகள் மேடைக்கு வந்து பெருமிதத்துடன் நின்றார். சபையோர்களிடமிருந்து கேள்விகள் சரமாரியாகக் கிளம்பின. ''மாபாவியோர் கூடி வாழும் மதுரை' என்று குறிப்பிட்டு எழுதியதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என மக்கள் குழப்பம் செய்தனர். சுவாமிகள் தமது கரங்களை உயர்த்தி அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டு தமது கருத்தை விளக்கத் தொடங்கினார்.

'மா' என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், 'பா' என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும், 'வி' என்ற சொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கிறது'' என்று கூறி, அதற்கு ஆதாரமாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலிருந்து சில செய்யுட்களைப் பாடி விளக்கம் தந்தார். ''மாபாவியோர் கூடி வாழும் மதுரை என்றால் திருமகளும், கலைமகளும் மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள் படுகிறது.

''அதாவது, சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் மதுரையில் செல்வம் கொழிக்கும் அத் திருநகரில், இந்தச் சிலம்பை வாங்க ஆள் கிடைக்காதே என்ற கருத்துப்பட ''மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்கு மன்னா போகாதீர்'' என்று மதுரை நகரைப் பெருமையாகக் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, சிறுமைப்படுத்தும் எண்ணம் எனக்கில்லை'' என்றார். சபையோர் சுவாமிகளின் புலமையை வியந்து கைதட்டிப் பாராட்டினார்கள்.




# சாலை விபத்துக்கள்!


பி. பரமகுரு, ஐ.பி.எஸ்.,
காவல்துறை ஆணையாளர்,
சென்னை.



முந்தைய காலத்தில் ஓர் இடத்திலிருந்து, வேறு இடத்திற்குக் கால்நடையாகவேதான் போக வேண்டியதிருந்தது. நம்முடைய முன்னோர்கள் தங்களுடைய பொருட்களைத் தோளில் சுமந்து கொண்டு, மனைவிமக்களோடு ஆடு மாடுகளை முன்னால் வழிநடத்திச் சந்தோஷமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

காலப்போக்கில் வசதியுள்ளவர்கள், இரண்டு கம்புகளை இணைத்து அதன் நடுவில் ஒருவகையான இருக்கையை அமைத்து அதைத் தங்களுடைய வேலைக்காரர்கள், அல்லது அடிமைகள் தூக்கிச் செல்வதான ஒரு சாதனத்தைக் கண்டு பிடித்தார்கள். இதுவே, ஐரோப்பாவிலும் நடைமுறையில் வந்து, இந்தியாவில் பல்லக்கு என்ற சாதனமாக அமைந்தது.

இதற்குப் பிறகு, பயண உலகின் முக்கிய காலக்கட்டமாகச் 'சக்கரம்' கண்டுபிடிக்கப்பட்டு, குதிரை, மாடு, ஒட்டகம், யானை முதலியன பூட்டப்பட்ட வண்டி, நடைமுறையில் வந்தது. அடுத்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது சைக்கிள். கடைசியாக இன்றைய நாகரிகத்தின் முன்னோடியாக மோட்டார் கார் கண்டு பிடிக்கப்பட்டு, வாகன உலகில் முக்கியமான இடத்தைப் பெற்றது.

தீவிர மக்கள் தொகைப் பெருக்கம், வாகனங்களின் அதிகரிப்பு, குறைவான சாலைகளின் விஸ்தரிப்பு எல்லாமாகச் சேர்ந்து பெரும் பிரச்சினைகளை உண்டு பண்ணியிருக்கின்றன. அதில் முக்கியமானது சாலை விபத்துக்கள்.

வாகனங்களைப் போலப் பாதசாரிகளின் எண்ணிக்கையும் ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே போகிறது. இன்றைய வாகனங்கள் அகலமாகவும், உயரமாகவும், நீளமாகவும், அதிவேகமாகவும் செல்வதால் சாலைகளில் அதிக இடத்தை ஆக்ரமிக்க வேண்டியதிருக்கிறது.




ஆனால் பழைய காலத்தில் கட்டப்பட்ட பல சாலைகள் இன்றைய வாகனங்களின் அளவையும், எடையையும் தாங்கக்கூடிய நிலையில் இல்லை. குழப்பமான சாலைச் சந்திப்புகள், கண் மறைவான சந்துகள் (Blind Corners) சரியான விளக்கு ஒளியில்லாத இடங்கள் முதலியவற்றால் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டு விபத்துக்கள் நடைபெற்று விடுகின்றன.

வாகனங்களின் எண்ணிக்கையும் பாதசாரிகளின் எண்ணிக்கையும் கூடுவதுபோல, வாகனங்கள் செல்லக்கூடிய சாலையின் பரப்புக் கூடுகிறதா என்று பார்த்தால், இல்லை. அதற்குப் பதிலாகக் குறைகிறது. காரணம் என்னவென்றால். சாலையின் ஓரம் உள்ள கடை திடீரென முன்னால் சில அடிகள் நீண்டு விடுகிறது.

கடைகளின் முன்னால் வாகனத்தை நிறுத்தி வைப்பது, தேவையில்லாமல் அதிக நேரம் நிறுத்தி, மற்ற வாகனங்களுக்கு இடையூறு விளைவிப்பது, திடீரெனத் தோன்றும் வழிநடைக் கடைகள், சரக்குகளை லாரி ஷெட்டுகளுக்கு முன்னால் ஏற்றுவதும் இறக்குவதும், கால்நடைகளைச் சாலைகளில் அலைய விடுவதும், சாலையின் ஓரம் ஏல வியாபாரிகள் கூடுவதும், ஒரே நேரம் வேகமுள்ள வாகனங்களும் சாலையில் போவதும், மதச் சம்பந்தமானதும், அரசியல் சார்புள்ள கட்சிகள் ஊர்வலம் நடத்துவதும் அரசுத் துறையில் உள்ள பணியாளர் அடிக்கடி சாலையைக் கிளறித் தங்கள் துறையின் வேலைகளைச் செய்வதாலும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு இதனால் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகி விடுகின்றன.

சாலை விபத்துக்களை ஆராய்ந்து பார்த்தால், தவறாக, கண் மூடித்தனமாக ஓட்டுவதால்தான் விபத்துக்கள் நேருகின்றன என்பது தெரிகிறது. 'பெருஞ்சாலைப் போக்குவரத்தை எளிதாக்குதல்'

என்ற தனது புத்தகத்தில், திரு ஈனே, காரோட்டிகளை 4 வகையாகப் பிரிக்கலாம் என்பதாகக் கூறியுள்ளார்.

1. சாலை விதிகளைத் தெரிந்தவர்கள்; அதன்படி நடக்க விரும்புபவர்கள்.

2. சாலை விதிகளைத் தெரியாதவர்கள்; ஆனால் அதைத் தெரிந்துகொண்டால் அதன்படி நடந்து அதைக் கைக்கொள்ள விரும்பாதவர்கள்.

3. சாலை விதிகளைத் தெரிந்தவர்கள்; ஆனால் அதன்படி நடந்துகொள்ள விரும்பாதவர்கள்.

4. சாலை விதிகளைத் தெரியாதவர்கள். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும், அதைத்தெரிந்துகொண்டு வழி நடக்க விரும்பாதவர்கள்.

இதில் கடைசியாக உள்ள 3 பிரிவினரையும்தான் சாலை விதிகளைக் கற்றுக் கொள்ள வைத்து, பொறுப்பை உணர வைத்து- சாலை விதிகளின் அவசியத்தையும், விபத்துக்களைத் தடுக்க ஒரு நாட்டின் குடிமகனை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் உணர வைக்க வேண்டும்.

“தனக்கு வழிவிட்டு அடுத்தவன் ஓட்ட வேண்டும் என்று நீ நினைப்பதுபோல, அடுத்தவனுக்கு நீ வழிவிட்டு ஓட்ட வேண்டும்” என்ற சாலையின் மிக முக்கிய சட்டத்தை எல்லா வாகன ஓட்டிகளின் மனத்திலும் புகுத்த வேண்டும். சாலை விதிகளைப் பற்றிக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் போதிக்க வேண்டும்.

சாலை விபத்துக்கள் அதிகமாக நடக்கின்ற பகுதிகளில் சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், புகைப்படங்கள் வைப்பதன் மூலமாகவும், பத்திரிகை, சினிமா, வானொலி நிகழ்ச்சிகள். கண்காட்சிகள் மூலமாகவும், சாலை விதிகளை அறிவுறுத்திச் சாலைகளில் ஒழுங்காக ஓட்டுவதைப் பற்றியும், ஒழுங்காக நடப்பதைப் பற்றியும் போதிக்க வேண்டும்.

சாலை விபத்துக்கள் நடப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன:

1. அதிவேக வாகன ஓட்டத்தாலும், தன் கவனக்குறைவான பாதசாரிகளாலும், வாகனம் ஓட்டத்திலிருக்கும்போது வாகனத்திலிருந்து இறங்குவதாலும், ஏறுவதாலும்,

2. அனுபவமில்லாத காரோட்டியாலும், மோசமான சாலையாலும், சரியான சாலை விதி இல்லாததாலும்.

3. கால நிலையினாலும், வழுக்கான சாலையினாலும், கூர்மையான திருப்பத்தாலும், சாலையின் விபத்தினால் மீட்கமுடியாத ஒன்று மனித உயிர்: மற்ற எல்லாக் குற்றத்தையும்விடச் சாலை விபத்துக்களால்தான் அதிக உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சமீபகாலம் வரை நிறையப் பேர் அறிந்திருக்கவில்லை.

சென்னை நகரின் போக்குவரத்து, சில பிரச்சினைகளைக் கொண்டது. ஏனெனில் அதிவேகமாகப் போகும் கார்களும், பஸ்களும், லாரிகளும், மூன்று சக்கர வண்டிகளும், இரண்டு சக்கர வண்டிகளும், வேகக்குறைவான சைக்கிள்களும், காலால் ஓட்டப்படும் ரிக்ஷாக்களும், கையால் ஓட்டப்படும் வண்டிகளும் ஒரே நேரத்தில் போக வேண்டியதிருக்கிறது. இந்த ஒரே சீரான போக்குவரத்துக் கட்டுப்படுத்தப் படவில்லையானால் மனித உயிர்களைக் காப்பாற்றுவது கஷ்டம்.

1967-ஆம் ஆண்டு, பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்கள் 33,766. ஆனால் இந்த எண்ணிக்கை 1976-ஆம் ஆண்டு இரண்டு மடங்காகியது.(மொத்த வாகனங்கள் 64,266). 1967-ல் ஏற்பட்ட மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை 8,144. இவ் விபத்துக்கள் 1976-ஆம் ஆண்டில் 5,452 ஆகக் குறைந்தது. ஆனால், 1967-ஆம் ஆண்டில் நடந்த விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143-லிருந்து 1976-ஆம் ஆண்டில் 198 ஆக உயர்ந்தது. 1976-ஆம் ஆண்டில் நடந்த மொத்த விபத்துக்கள் 5,452-க்கும் முக்கியமான காரணங்கள்:—

(1) நெருங்கிப் பின்னே செல்லுதல்,

(2) சாலை அறிவிப்புகளை மீறுதல்,

(3) தவறான முன்னேறுதல்,

(4) ஓடும் வாகனத்தில் ஏறுதல், இறங்குதல்,

(5) கண்மூடித்தனமான, முட்டாள்தனமான வேகம்,


(6) பிரேக் சரியாக இயங்காமை,

(7) குடித்துவிட்டு ஓட்டுதல்,

(8) தவறான பக்கத்தில் முந்துதல்.

ஆனாலும் 1967-ஆம் ஆண்டைவிட 1976-ல் விபத்துக்கள் குறைந்ததற்குச் சாலை விதிகள் ஒழுங்கான முறையில் நடைமுறையில் கொண்டு வரப்பட்டு கண்ட்ரோல் செய்யப்பட்டதே காரணமாகும்.

சாலை விபத்துக்களுக்கான முக்கிய காரணங்கள் நல்ல முறையில் தெளிவாக ஆராயப்பட்ட வேண்டும். முறையான கல்வியின் மூலம் சாலை விதிகள் அறியப்பட்டு, ஒழுங்கான முறையில் அனுஷ்டிக்கப்பட்டு, விபத்துக்கள் நடக்காதபடி வழிவகைகள் செய்யப்பட வேண்டும். சாலை விதிகள் ஒழுங்கான முறையில் கைக்கொள்ளப்பட்டு அதன் மூலம் விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பாதசாரிகள், மோட்டார் ஓட்டிகள், காவலர் ஆகிய மூவரின் ஒன்றுபட்ட முயற்சியில்தான் அடங்கியுள்ளது. ஆகவே, இந்த முக்கியமான பிரச்சினையான, சாலை விபத்துக்களைத் தடுப்பது எல்லோருடைய ஒன்றுபட்ட கடமையாகும்.



# படமும் செய்தியும்






புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நிவாரணப் பணிகள், நிவாரணநிதி வசூல், புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொண்டு செய்யவிருக்கும் மறுவாழ்வுப் பணிகள் ஆகியவை பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக 6-12-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு அலுவலர்கள் மாநாட்டை 6-12-1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில், மாண்புமிகு தமிழகச் சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் துவக்கி வைத்துக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.




ஈரான் நாட்டு முன்னாள் முதல்வரும், ‘செனட்’ தலைவருமான திரு. ஜாபர் ஷெரீப் இமாமி அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டிற்கு வருகை தந்த ஈரான் நாட்டுப் பிரதிநிதிகள் 6-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்தனர்.






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் உடைந்துபோன குடகனுறு அணையைப் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வேடசந்தூர்-குடகனுறு பகுதியில் நடைபெறும் வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார்.







முன்னாள் இராணுவ வீரர்களின் நலனுக்காக 7-12-1977 அன்று இந்தியாவெங்கும் "கொடிநாள்" விழா நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரதி விநய் ஜா அவர்களிடம் கொடிநாள் நிதி அளிக்கிறார்.

முதறிஞர் இராஜாஜி அவர்களின் 100-வது பிறந்த நாளையொட்டி, இராஜாஜி நினைவாலயத்தில் உள்ள இராஜாஜி சிலைக்கு 8-12-1977 அன்று, மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலையணிவித்தார்.





மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 100-வது பிறந்தநாளையொட்டி, சென்னை சர்தார் வல்லபாய் பட்டேல் சாலையில் உள்ள இராஜாஜி நினைவாலயத்தில் இருக்கும் இராஜாஜி சிலைக்கு 8-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மாலையணிவித்தார்.



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 8-12-1977 அன்று நடைபெற்ற மூதறிஞர் இராஜாஜி அவர்களது 100-வது பிறந்தநாள் விழாவில், மூதறிஞர் இராஜாஜி நூற்றாண்டு விழாக் குழுவினர் சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சென்னை சட்டக் கல்லூரி மாணவர் திரு ஆர். பழனிச்சாமிக்கும், 'ஹோலி ஏஞ்சல் கான்வெண்ட்' மாணவி செல்வி ரதிகாவுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தங்கப் பதக்கங்களையும், பரிசுப் புத்தகங்களையும் வழங்கினர்.







சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பள்ளி மாணவர் நல மருத்துவக் குழு மற்றும் சமூக சேவைப் பிரிவைச் சார்ந்த மருத்துவர்கள் 30-11-1977 அன்று, காசுத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த சிறுவர்–சிறுமியர்களுக்குத் தடுப்பு ஊசி போட்டனர்.



திரைப்படப் பட்டதாரிகள் சங்க முதலாண்டு விழாவிற்குத் தலைமை வகித்த மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்,முதற்பரிசுபெற்றவருக்குச்சுழற்கேடயம்' வழங்கினார்.

திரைப்படப் பட்டதாரிகள் சங்கத்தின் முதலாண்டு விழா தென்னிந்திய திரைப்பட வர்த்தகச் சங்க அரங்கில் 11-12–1977 அன்று நடைபெற்றது. அவ்விழாவையொட்டி வெளியிடப்பெற்ற சிறப்புமலரை மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வெளியிட்டு, பரிசு பெற்றவர்களுக்கு 'நினைவுச் சின்னம்' வழங்கினார்.



# ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது!

**— கல்கி**



கதைகளில் எத்தனையோ வகைக் கதைகள் இருக்கின்றன. அராபியக்கதை, அத்தைப் பாட்டிக் கதை, விக்ரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை. தற்காலத்து நவீனச் சிறு கதைகள்—எல்லாம் இருக்கின்றன. உபநிஷதங்களிலும், பைபிளிலும் கூடக் கதைகள் இருக்கின்றன. இவற்றில் ராஜாஜியின் கதைகள், உபநிஷதக் கதைகளோடு சேர்க்கப்பட வேண்டியவை.

கட்டுரைகளில் எத்தனையோ வகைகள் உண்டு. ஒரு தடவை படித்து விட்டு எறிய வேண்டியவை, இரண்டு மூன்று தடவைகள் படித்துச் சிந்தித்துப் பயன்பெற வேண்டியவை. படிக்காமலேயிருந்தால் க்ஷேமம் என்ற இனத்தில் சேர்ந்தவை-இப்படிப் பலவகைக் கட்டுரைகள் உண்டு. பகவத்கீதையைப் போல் தினம் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டிய கட்டுரைகளும் உண்டு.

இந்தக் கடைசி வகையைச் சேந்தவை ராஜாஜியின் கட்டுரைகள்.

சென்ற நாற்பதாண்டுக் காலத்தில் தமிழ் மொழியிலே எத்தனை எத்தனையோ வசன நூல்கள், கவிதை நூல்கள்-பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் வெளியாகியிருக்கின்றன.

இவ்வளவு நூல்களிலே இன்னும் நூறு வருஷங்களுக்குப் பிறகு வரும் தமிழர் சந்ததிகள் படிக்கக் கூடிய நூல்கள் எவை என்று கேட்டால், பாரதியாரின் கவிதைகளும், ராஜாஜியின் கதைகள்- கட்டுரைகளும்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏனெனில் இந்தக் கதைகளில் வரும் பாத்திரங்கள் நம் காலத்து ஸ்திரீகள், புருஷர்களேயானாலும், அவர்களைக் கொண்டு விளக்கப்படும் உண்மைத் தத்துவம் முக்காலத்துக்கும் பொதுவானது: சாசுவதமானது; அழிவில்லாதது, உண்மைத் தத்துவத்தை விளக்கும் காரணத்தினாலே, கதையின் ஓட்டமும் சுவையும் குறைந்து விடுகின்றனவா? படிக்க ஆரம்பிக்கும் போதே, ''இதெல்லாம் பெரிய விஷயங்கள், நமக்கு எங்கே விளங்கப் போகிறது?'' என்று தோன்றி விடுகிறதா?

ராஜாஜி அப்படியெல்லாம் நம்மைப் பயமுறுத்துவதில்லை. சின்னஞ் சிறு பிள்ளைகள் கூடப் படிக்க ஆசை கொள்ளும் முறையிலே கதையைத் தொடங்குகிறார். அப்புறம் கதையின் சுவாரசியத்திலே தங்கு தடை இல்லாமல் நம்மை இழுத்துக் கொண்டே போகிறார். கதையை முடிக்கும் போது, ''இத்தனை நேரமும் நாம் கதை படித்தோமா, வேத மந்திரம் படித்தோமா?'' என்று திகைக்கும்படிச் செய்து விடுகிறார்.


எளிய வாழ்வுக்கும் உயரிய சிந்தனைக்கும் ராஜாஜி உதாரண புருஷராக விளங்குகிறார். இந்த இரண்டு அம்சங்களையும் அவருடைய தமிழ் நடையிலும் காண்கிறோம்.

எளிமை என்றால், இதைவிட எளிமையாகத் தமிழ் எழுதவே முடியாது என்று சொல்லலாம். ஆனால், நடை எவ்வளவுக்கு எளியதோ, அவ்வளவுக்கு ராஜாஜி எழுதும் விஷயங்கள் உயர்வானவை.

இன்னும் ராஜாஜியிடம் நாம் காணும் ஒப்பற்ற தூய்மை, கட்டுப்பாடு, வினைத்திட்பம் ஆகியவற்றையும் அவருடைய தமிழ்நடையில் காண்கிறோம். மலைச் சுனையில் உற்பத்தியாகிப் பாறாங்கற்களின் மீதும் கூழாங்கற்களின் மீதும் சலசல வென்று ஓடும் பளிங்கு போன்ற தூய்மையான ஓடை நீரில் எத்தகைய தெளிவை நாம் காண்கிறோமோ, அத்தகைய தெளிவை ராஜாஜியின் தமிழ் நடையில் காண்கிறோம்.

குற்றாலம், பாபநாசம் முதலிய மலைகளில் தெளிந்த நீரருவி ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் வரும்போது நடுவில் சில இடங்களில் ஆழமான சுனைகளில் விழுந்தும் வருவதுண்டு. அந்தச் சுனைகளில் கழுத்து அளவு ஆழமும், அதைவிட அதிகமான ஆழமுங்கூடச் சில இடங்களில் இருப்பதுண்டு. ஆனால் சுனையில் குனிந்து பார்த்தோமானால், அவ்வளவு ஆழத்தின் அடியில் கிடக்கும் கூழாங் கற்களும் சரள்கற்களும் நன்கு புலனாகும். அப்படியே ராஜாஜியின் கட்டுரைகளைப் படித்துக் கொண்டே போகும் போது சில சமயம் ஆழ்ந்த கருத்துக்களடைந்த பகுதிகளுக்கு வருகிறோம். ஆனால் ஆழத்தைக் கண்டு நாம் பயப்படுவதில்லை. அடியிலுள்ள முத்துக்களையும் ரத்தினங்களையும் தெளிவாகக் கண்டு அதிசயிக்கிறோம். சிலர் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்று உபசாரத்துக்குச் சொல்வதுண்டு. ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகிறதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

**—ஆதாரம்: கல்கி இதழ் (1961)**



# துண்டிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்புகள் துரிதமாகச் சீரமைக்கப்பட்டன !

புயல் வீசுவதற்கு முன்பு திருச்சி, கரூர், பாண்டிச்சேரி, கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் 15,000 தொலைபேசி வழிகள் (Lines) இயங்கி வந்தன. புயல்—வெள்ளத்தால் தந்திக் கம்பங்கள் சாய்ந்ததாலும், மரங்கள் விழுந்துத் தந்திக் கம்பிகள் அறுந்ததாலும், 12-11-1977 அன்று மேற்கூறிய பகுதிகளில் 7,500 தொலைபேசி வழிகள் தொடர்பற்று இயங்கவில்லை.

புயலாலும், அதன்பின் ஏற்பட்ட வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டது திருச்சி தொலைபேசி அமைப்பேயாகும். திருச்சி நகரின் தாழ்வான பகுதிகள், ஏறத்தாழ 48 மணி நேர அளவுக்கு வெள்ளத்தில் மூழ்கின! மேல் மட்ட தந்திக் கம்பிகள் மட்டுமன்றி, பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள 'கேபிள்'களும் பாழ்பட்டதால், திருச்சியில் உள்ள 5,200 தொலைபேசி வழிகளில் 3,000 தொலைபேசி வழிகள் இயங்காமல் இருந்தன. அவைகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டு 23-11-1977க்குள் இயல்பான நிலைக்குத் திரும்பின.

ஸ்ரீரங்கம் தொலைபேசித் தொடர்பகத்தில் ஏறத்தாழ 2 நாள் வரை வெள்ளம் நின்றது. இத்தொலைபேசித் தொடர்பகம் வெள்ளத்தின் காரணமாக 12-11-1977 அன்று மூடப்பட்டது. இந்தத் தொலைபேசித் தொடர்பகத்தின் ஒரு பகுதியை 19-11-1977 அன்றுதான் மீண்டும் இயங்கச் செய்ய முடிந்தது.

இது போலவே, பல நகரங்களின் தொலைபேசித் தொடர்பகங்களும், புயல்—வெள்ளத்தால் பாழடைந்தன. இதனால் அவ்வூர்கள் வெளியுலகத் தொடர்பற்று இருந்தன!

சாய்ந்த கம்பங்களை நிலைநிறுத்தி, ஒடிந்த கம்பங்களை அகற்றிப் புதிய கம்பங்களை நட்டு, அறுந்த கம்பிகளைப் புதுப்பித்துத் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்த தொலைபேசித் துறையினர் துரிதமாகப் பணியாற்றினர். அவர்களுடைய அயராத முயற்சினால் தொடர்பற்றிருந்த தொலைபேசி வழிகளின் எண்ணிக்கை 7,500லிருந்து படிப்படியாகப் பின் கண்டவாறு குறைந்து 10 நாளில் 1,100 என்று ஆகியது.

| நாள் | தொடர்பற்றிருந்த தொலைபேசி வழிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 12—11—1977 | 7,500 |
| 15—11—1977 | 5,100 |
| 18—11—1977 | 3,400 |
| 21—11—1977 | 2,400 |
| 23—11—1977 | 1,100 |

தொடர்பற்றிருந்த மீதி 1,100 தொலைபேசி வழிகளும் பிறகு உடனடியாகச் சரி செய்யப்பட்டு விட்டன. தற்பொழுது எல்லாத் தொலைபேசி வழிகளும் இடையூறு இன்றி இயங்குகின்றன. சோதனை மேல் சோதனை ஏற்பட்டு வந்த போதிலும், தொலைபேசித் துறையினர் துவண்டுவிடாமல் சாதனை படைத்துள்ளனர் என்றால் மிகையாகாது! எனவே. அவர்களைப் பாராட்டுவது நம் கடமையாகும்.



இரயில்வே துறையினர் இரவுபகல் பாராது பாடுபட்டு இரயில் போக்குவரத்தை மீண்டும் துவக்கினர்!

"அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை எந்த இரயிலும் புறப்படாது!'' என்ற இரயில்வே நிலைய ஒலிபெருக்கிகள் ஒலித்துக் கொண்டிருந்தன! அவசரமாகச் செல்ல வேண்டிய பயணிகள் மூட்டை முடிச்சுகளுடனும், குழந்தைகளுடனும் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்றனர்!

* * * *

''நடு வழியில் இரயில் நின்றுவிட்டதே! இரயில் போகாதா?'' என்று கேட்டவண்ணம் பயணிகள் இரயில் வண்டியிலிருந்து தடதட வென்று கீழே இறங்கினர்!

''வழியில் பாலம் உடைந்து விட்டதால் இரயில் போகாது!'' என்று கேள்விப்பட்டு, ''போக வேண்டிய இடத்திற்கு எப்படிப் போவது?'' என்று திகைத்து நின்றனர்!

* * * *

இரயில் நிலையத்தின் ஓடுகளெல்லாம் புயலில் பறந்து விட்டதால் பயணிகள் தங்க இடமின்றி, சாப்பிட வழியின்றித் தவித்தனர்!

* * * *

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தமிழகத்தின் பல இடங்களில் அண்மையில் காண நேர்ந்தது! ஆம்! அண்மையில் வீசிய புயல், பெய்த மழை ஆகியவற்றினால் தமிழகத்தின் பல இடங்களில் இரயில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு பயணிகள் தவித்த காட்சியைக் கண்டு மனம் உருகியது!

வங்கக் கடலில் தோன்றிய புயல் நாகப்பட்டினம் அருகே 12-11-1977 அன்று கரையைக் கடந்தது. நாகப்பட்டினம் இரயில் நிலையத்தின் மேலே வேயப்பட்டிருந்த 'ஆஸ்பெஸ்டாஸ்' ஓடுகளெல்லாம் புயலில் பறந்து விட்டன. பயணிகள் தவித்தனர்.

கடும் மழை பெய்ததால்—காட்டாறுகளிலெல்லாம் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால்—பல இடங்களில் இரயில் பாதைகளில் உடைப்புகள் ஏற்பட்டன!


கரூருக்கு அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இரயில் பாலம் இடிந்து விட்டது!

### சேதங்கள்

புயல்—வெள்ளத்தால் இரயில்வே துறைக்குப் பின்கண்ட சேதங்கள் ஏற்பட்டு உள்ளன.

| | |
|---|---|
| இரயில் பாதைகளுக்கும், இரயில் நிலையக் கட்டடங்களுக்கும் ஏற்பட்டுள்ள சேதங்களின் மதிப்பு | ரூபாய் 1.5 கோடி |
| கரூருக்கு அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே மீண்டும் புதிதாகப் பாலம் கட்டுவதற்கு ஆகக்கூடிய செலவு | ரூபாய் 1.0 கோடி |
| சேதமடைந்த இரயில் பாதையின் நீளம் | 6,533 மீட்டர் |
| இடிந்த பாலங்களின் எண்ணிக்கை | 94 |
| சேதமடைந்த இரயில்வே தொழிலாளர் வீடுகளின் எண்ணிக்கை | 437 |
| பாழடைந்த இரயில் நிலையங்களின் எண்ணிக்கை | 19 |

இரயில் பாதையில் பற்பல இடங்களில் ஏற்பட்ட உடைப்புகளாலும், இரயில் பாலங்கள் இடிந்ததாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் பகுதிகளில் கடந்த நவம்பர் 12, 13 ஆகிய இரு நாட்களில் இரயில் போக்குவரத்து ஏறத்தாழ முழு அளவுக்கு நடைபெறவில்லை.



இரயில்வே துறையினர் பல்லாயிரக்கணக்கான ஆட்களை வைத்து இரவும் பகலும் பணியாற்றி, உடைப்புகளை அடைத்து, பாலங்களைச் சீரமைத்ததால், பின்கண்டவாறு பல பிரிவுகளில் இரயில் போக்குவரத்து மீண்டும் துவங்கப்பெற்றது.

## மீண்டும் இரயில் போக்குவரத்து துவங்கியது !


| பிரிவின் பெயர் | இரயில் போக்குவரத்து மீண்டும் துவங்கிய நாள் |
|---|---|
| 1. திண்டுக்கல்-பொள்ளாச்சி | 14-11-77 |
| 2. விழுப்புரம்-காட்பாடி | 16-11-77 |
| 3. விருத்தாசலம்-சேலம் | 16-11-77 |
| 4. திருச்சி-விழுப்புரம் முக்கிய வழியில் கடலூர்-திருச்சி | 16-11-77 |
| 5. திருச்சி-விழுப்புரம் குறுக்கு வழியில் விழுப்புரம்-லால்குடி | 17-11-77 |
| 6. திருச்சி-விழுப்புரம் முக்கிய வழி முழுவதும் | 18-11-77 |
| 7. மாயவரம்-தரங்கம்பாடி | 18-11-77 |
| 8. மாயவரம்-காரைக்குடி | 18-11-77 |
| 9. பேரளம்-காரைக்கால் | 18-11-77 |
| 10. விழுப்புரம்-திருச்சி குறுக்கு வழி முழுவதும் | 19-11-77 |
| 11. திருச்சி-திண்டுக்கல் பிரிவில் திருச்சியிலிருந்து மணப்பாறை வரை | 19-11-77 |
| 12. திருச்சி-ஈரோடு பாதையில் திருச்சிக்கும் வீரராக்கியத் திற்கும் இடையில் | 21-11-77 |
| 13. திருச்சி-ஈரோடு பாதையில் வீரராக்கியத்திற்கும் கரூருக்கும் இடையில் உள்ள பகுதி தவிர்த்த மீதிப் பாதை முழுவதும் | 21-11-77 |
| 14. நாகை-நாகூர் | 22-11-77 |
| 15. திருச்சி-திண்டுக்கல் பாதை முழுவதும் | 23-11-77 |

## சீரமைப்புக்குப் பயன்படுத்தப்பட்ட ஆட்களும், பொருள்களும் !

இவ்வாறு பத்தே நாட்களில் இரயில் போக்குவரத்தை எல்லாப் பிரிவுகளிலும் மீண்டும் துவக்குவதற்கு இரயில்வேத் துறையினர் 72,000 பேர்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் பின்கண்டவைகளைப் பயன்படுத்தியுள்ளனர்:

| | |
|---|---|
| பயன்படுத்தப்பட்ட 'சிண்டர்' வாகன்கள் | 1,600 |
| பயன்படுத்தப்பட்ட 'பௌல்டர்' வாகன்கள் | 182 |
| பயன்படுத்தப்பட்ட 'ஸ்லீப்பர்கள்' | 3,500 |

இரவு பகல் பாராது பாடுபட்டு, பத்தே நாட்களில் 15 பிரிவுகளில் முழு அளவில் இரயில்வே போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்காகவும், 25 இலட்சம் ரூபாய் செலவிட்டுப் பதினைந்தே நாட்களில் அமராவதி ஆற்றின் குறுக்கே தற்காலிகப் பாலம் அமைத்து, 16—12—1977 அன்று திருச்சி—ஈரோடு இரயில் போக்குவரத்தை முழுமையாகத் துவக்கியதற்காகவும் நாம் இரயில்வே துறையினரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.



# அழகைக் காட்டும் கண்ணாடி!

''அலங்காரம் இன்னுமா முடியலே? மணி ஆகுதே!''

''இதோ வந்துட்டேங்க!''

கண்ணாடிமுன் மணிக்கணக்காக நின்றுகொண்டு அலங்காரம் பண்ணிக் கொள்வது பெண்கள் மட்டுமா, ஆண்களும் கூடத்தான்!

அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறதோ இல்லையோ, ஆனால் முகத்தின் அழகு கண்ணாடியில் தெரிகிறது!

அன்றாட வாழ்க்கையில் கண்ணாடி ஓர் இன்றியமையாத பொருளாக விளங்குகிறது. இதன் உதவி இல்லாமல் நாம் வெளியே வருவதில்லையே! யார் முகத்தில் விழிக்கிறோமோ இல்லையோ, நாம் கண்ணாடி முகத்தில் விழித்தே ஆக வேண்டும்!

முகம் பார்க்கும் கண்ணாடிகளில்தான் எத்தனை வகை!

சதுரம், வட்டம், நீண்ட வட்டம், முக்கோணம் இப்படிப் பல வகைகளில், பல அளவுகளில் அழகிய சட்டங்களுடன் காட்சியளிக்கும் கண்ணாடிகளைக் கடைகளில் பார்க்கும்போது, யாருக்குத்தான் அதை வாங்க மனம் வராது?

வாங்குவதற்கு முன், அந்தக் கண்ணாடிகள் தயாராகும்தொழிற்கூடத்துக்குப் போய் வருவோமா?

சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டை!

தமிழ்நாடு அரசு உருவாக்கியிருக்கும் இத்தொழிற்பேட்டையில் பல்வேறு தொழில்கள் பாங்காய் வளர்ந்து வருகின்றன; அதன் மூலம் பல்லாயிரவர் வேலைவாய்ப்புப் பெறுவதையும் நாம் பார்க்கிறோம்.

உழைக்கும் கரங்கள் உருவாக்கும் பொருள்களிலே ஒன்றாய்த் திகழ்வது முகம் பார்க்கும் கண்ணாடியும் ஆகும். இதனை உருவாக்குகிறது, இந்தத் தொழிற்பேட்டையில் உள்ள ஒரு நிறுவனம்.

## வளரும் தொழில்

1946-ல் குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் பிறகு படிப்படியாக வளர்ந்தது. இதற்குக் கை கொடுக்கும் வகையிலே மத்திய, மாநில அரசுகள் உதவின. தொழிலுக்கு இடந் தந்தது தமிழக அரசு. தொழிலை வளர்க்கப் பொருளுதவி வேண்டுமல்லவா? அதற்கு உதவமுன் வந்தது 'சிட்கோ'. இயந்திரங்களுக்குத் தேசிய உடைமையாக்கப்பட்ட 'ஸ்டேட் வங்கி' கடன் தந்து உதவியது.

எல்லாவற்றுக்கும் மேலாக விடாமுயற்சியும், கடின உழைப்பும் இந்நிறுவனத்தாருக்கு இருந்ததால், மனம் தளராமல் இத்தொழிலில் அவர்கள் வெற்றி காண முடிந்தது. உழைப்பால் உயரலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழும் இந்நிறுவனம், இப்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.


இத்தொழிற்கூடத்தினுள் நுழைகிறோம்.

பெரிய கண்ணாடியின் நான்கு பக்க ஓரங்களுக்குப் பட்டை தீட்டுகிறது ஒரு இயந்திரம். இந்த இயந்திரம் பெல்ஜியத்திலிருந்து தருவிக்கப்பட்டது என்றும், இங்குள்ள மற்ற இயந்திரங்கள் இந்நிறுவனத்தாராலேயே தயாரிக்கப் பெற்றவை என்றும் அறிகிறோம்.


பட்டை தீட்டிய கண்ணாடிகளுக்கு மெருகு தரும் இயந்திரத்தையும் பார்க்கிறோம். சிறிய கண்ணாடிகளுக்குப் பட்டை தீட்டும் மற்றொரு இயந்திரத்தையும் பார்த்துக் கொண்டே மேலே செல்கிறோம்.

பெரிய கண்ணாடிகளுக்குப் பட்டை தீட்டும் இயந்திரம்.





கண்ணாடிகளுக்கு வடிவு அமைத்தல்.



கண்ணாடிக்குத் 'தாமிரப் பூச்சு' பூசப்படுகிறது.

கண்ணாடிகள் எந்த உருவில்- சதுரம், வட்டம், நீண்ட வட்டம் முதலான எந்த உருவில் வேண்டுமோ அந்த உருவில் கண்ணாடிகளைப் பெற உதவுகிறது ஒரு இயந்திரம்.

பிறகு இந்தக் கண்ணாடிகளுக்கு வெள்ளிப்பூச்சு (Silvering Spray) அதாவது 'ரசம்' பூசப்படுவதையும், பிறகு தாமிரப் பூச்சு (Copper Spray) பூசப்படுவதையும் பார்க்கிறோம். கடைசியாகக் கண்ணாடியின் பின்புறம் காவி வர்ணம் பூசப்படுகிறது. இவையனைத்தும் கருவிகளின் உதவி கொண்டே செய்யப்படுகின்றது.

இப்போது கண்ணாடிகள் சட்டம் போடும் பிரிவுக்குக்கொண்டு வரப்படுகின்றன. அங்கே பல வண்ணங்களில், பல கன அளவுகளில் உள்ள மரச் சட்டங்கள் கண்ணாடிகளுக்குப் பொருத்தப்படுகின்றன. இப்போது கண்ணாடி முழு உருவம் பெறுகிறது.

கண்ணாடி நம் கைக்கு வர, முதலில் அது கடைக்கு வர வேண்டாமா?

'பார்சல்' பிரிவில் இந்தப்பணி நடைபெறுகிறது. கண்ணாடிகள் சிறுசிறு அட்டைப் பெட்டிகளில் போடப்பட்டு, அவை பெரிய மரப்பெட்டிகளில் அடைக்கப்படுகின்றன.

இங்குத் தயாராகும் அழகிய முகம் பார்க்கும் கண்ணாடிகள் தமிழகம் தவிர ஆந்திரம், கேரளம், கர்நாடகம் முதலான மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இந்தக் கண்ணாடிகளுக்கு நல்ல ஆதரவு பெருகுவதற்குக் காரணம், இதன் தரமும் குறைந்த விலையுமே ஆகும். இங்குத் தயாராகும் ஒரு கண்ணாடியின் குறைந்த விலை ரூ. 1.10

கண்ணாடியில் பார்த்து நம்மை அழகுப்படுத்திக் கொள்கிறோம். ஆனால், அந்தக் கண்ணாடியும் கொஞ்சம் அழகாக இருக்க வேண்டாமா?

அதற்குக் கண்ணாடிகளைப் பல வடிவங்களில் மட்டும் அமைத்தால் போதுமா? அந்தக் கண்ணாடியில் பூ வேலைப்பாடுகளும் இருந்தால் மேலும் அது வீட்டுக்கு அழகைத் தராதா? அந்தப் பூவேலைப்பாடும் இங்கே தக்கவர்களால் செய்யப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் ஒரு அங்கமாகப் பெரிய அளவில் இயங்கி வருவது 'பில்கோ மிர்ரர்' தொழிற்கூடமாகும். இதுவும் கிண்டித் தொழிற்பேட்டையிலேயே 1961 முதல் இயங்கி வருகிறது.

தென்னிந்தியாவில். நவீன இயந்திர வசதிகளுடன் பல்வேறு கண்ணாடிகளைத் தயாரிக்கும் ஒரே நிறுவனமாக இந்நிறுவனம் விளங்கி வருகிறது. இந்தத் தொழிற்கூடத்தில், இந்தியாவில் வேறெங்கும் இல்லாத 'Airless Spray Equipment' என்ற நவீன தானியங்கி இயந்திரம் ஒன்று உள்ளது. இது விரைவாகவும், தெளிவாகவும் கண்ணாடிகளுக்கு 'ரசம்' பூசுகிறது. இன்னொரு நவீன இயந்திரமும் இங்கு உள்ளது. அதன் பெயர்: (Curtain Coat painting Machine).

கண்ணாடிகள் பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. கல்கத்தாவிலிருந்தும் கண்ணாடிகள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றைத் தேவையான அளவுக்குத் துண்டித்து, பட்டை தீட்டி, மெருகு ஏற்றி, 'ரசம்' பூசுவது போன்ற பணிகள் எல்லாம் இங்கே நடக்கின்றன

இங்குத் தயாராகும் முகம் பார்க்கும் மற்றும் ஜன்னலுக்கான அழகிய கண்ணாடிகள் சவூதி அரேபியா, குவைத், மொரீசியஸ் தீவு ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல, பல்வேறு சிறு தொழில்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழ்நாட்டின் தொழில் வளத்துக்கு அணிசேர்க்கின்றன அல்லவா? அதில் இந்த இரு சகோதர நிறுவனங்களுக்கும் சிறப்பான பங்குண்டு என்பதை நாம் மகிழ்ச்சியோடு சொல்லலாம்.

—பி. வி. கிரி

# மனித உரிமைகள்

மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இயல்பாக அமைந்துள்ள பெருமையும், மாற்றவே முடியாத சரிநிகர் சம உரிமைகளும் இவையெனத் தெளிதலே உலக விடுதலைக்கும், நேர்மைக்கும், அமைதிக்கும் அடிப்படையாதலாலும்,

மக்கள் உரிமைகளைப் புறக்கணிப்பதும், மறுப்பதும் காட்டுமிராண்டிச் செயல்கள் விளைவதற்குக் காரணமாவதோடு அமையாமல், மக்களுடைய மனச் சான்றையும் கொதிக்குமாறு செய்துவிடுதலாலும், பேச்சுரிமை சமயக் கோட்பாட்டுரிமை, அஞ்சாமை உரிமை, வாழ்க்கைத் தேவை உரிமை இவைகளைத் தடையின்றிப் பெற்று இன்புறுவதற்கு ஏற்ற ஒரு புத்துலகத்தைத் தோற்றுவிப்பதே பொதுமக்களுடைய பெரு வேட்கையாதலாலும்,

கொடுங் கோன்மை, அடக்குமுறை இவைகளை எதிர்த்துப் புரட்சிக் கலகம் செய்வதன்றி வேறு வழியில்லை யென்று, துணியும் நிலையை ஒருவருக்கு ஏற்படுத்தாது இருக்க வேண்டுமானால் மக்களுடைய உரிமைகளைத் தக்க சட்டங்களின் மூலம் பாதுகாத்தல் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

பல்வேறு நாடுகளுக்கிடையே கேண்மையை வளர்த்து அவற்றை உறவு நாடுகளாக்குதல் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

மக்களுடைய அடிப்படை உரிமைகளிலும், தனி ஒருவருடைய பெருமை, தகுதி இவைகளிலும், ஆண் பெண் இவர்களின் சரிநிகர் சமஉரிமைகளிலும் தமக்குள்ள நம்பிக்கையைத் தாம் வழங்கிய உலக அறிவிப்பில் ஐக்கிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உறுதிபடுத்தி உள்ளமையாலும், சமூக முன்னேற்றம் வாழ்க்கை நிலை இவைகளை மேலும் மேலும் உரிமை நல்கி உயர்த்துவதாக அவர்கள் துணிந்து உள்ளமையாலும்,

மக்கள் உரிமைகளையும் அடிப்படை விடுதலைகளையும் வழங்கும் முறைகளைக் கடைபிடிக்க, உறுப்பு நாடுகள் ஐக்கிய நாடுகளோடு ஒத்துழைக்க உறுதி மொழி எடுத்துக் கொண்டுள்ளமையாலும்,

இந்த உறுதி மொழியை முழுமையும் நிறைவேற்றி வைக்க மக்களுக்குரிய உரிமைகளும், விடுதலைகளும் இவை இவையென எல்லாரும் ஒரே வகையாக அறிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

**மனித உரிமை நாள் விழா நாடெங்கும் 10-12-1977 அன்று கொண்டாடப்பட்டதையொட்டி இக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.**

பல்வேறு வகைப்பட்ட இனத்தவர்களும் பல்வேறு வகைப்பட்ட நாடுகளும் தம் தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் துணை செய்யும் ஆற்றல் அமைந்த ஒரு சிறந்த கருவியாக மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பை வழங்கி இந்த உறுதி மொழி அறிவிப்பை எப்பொழுதும் நினைவில் இருத்திக் கொண்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் உறுப்பாக அமையும் தகுதி பெற்ற ஒவ்வொருவரும், அறிவுறுத்தலாலும், பயிற்சி கொடுத்தலாலும் தனி நாட்டு இயல், அனைத்து நாட்டு இயல் இரண்டிற்கும் ஒத்த முன்னேற்ற முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருதலாலும், மக்களுக்குரிய உரிமைகளையும், விடுதலைகளையும் குறித்த நன் மதிப்பைப் பெருக்கி, உறுப்பு நாடுகளின் குடிகளும், அவற்றின் ஆட்சிக்குட்பட்ட குறுநிலக் குடிகளும் மக்களும் உரிமை, விடுதலை இவைகளின் பயன்களை நன்குக அறிந்து அவற்றைக் கடைப்பிடிக்கும் நிலையை ஏற்படுத்தல் வேண்டுமென்று அறிவிக்கின்றது.

**பிரிவு 1.** பிறப்பாலும் பெருமையாலும் உரிமையாலும் மக்கள் எல்லோரும் ஒத்த நிலையுடையவர்களே. அவர்கள் இயற்கையிலேயே பகுத்தறிவும் மனச் சான்றும் பெற்றுள்ளார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் உடற் பிறப் புணர்ச்சியோடு பழகல் வேண்டும்.


**பிரிவு 2.**—(1) மேற்படி உலக அறிவிப்பில் கண்ட உரிமைகளும், விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடமைகளாகும், இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல்–கொள்கை, அல்லது பிறவகைக் கொள்கை பிறந்த நாட்டியல்பு அல்லது பிறந்த சமூக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு,வளம், குடிபிறப்பு அல்லது பிறவகைச் செல்வாக்கு இவைகளில் ஒன்றையும் கருதாமல் மேற்படி உலக அறிவிப்பில் அடங்கிய எல்லா வகையான உரிமைகளும், விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவுடைமைகளாகும்.

(2) சாதியம், நிறம், ஆண் பெண் வேற்றுமை, மொழி, சமயம் காரணமாக அல்லது அரசியல் சம்பந்தமான அல்லது வேறுவிதமான அபிப்பிராயம் காரணமாக, அல்லது இன்ன தேசத்தில் அல்லது இன்ன சமுதாயத்தில் இருந்து வந்தமை காரணமாக, அல்லது ஆதனம். அல்லது பிறப்புக் காரணமாக, அல்லது வேறேதும் அந்தஸ்து காரணமாக எவ்விதமான பேதமும் இல்லாது சகல உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்க ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

மேலும், ஒருவருடைய தேசம் அல்லது நாடு சுதந்திரமுடையதாயினும் சரி, அதன் பரிபூரண சுதந்திரத்துக்கு எவ்விதமான கட்டுப்பாடுடையதாயினும் சரி, அதனுடைய அரசியல் நிலைமையையேனும் நியாயாதிக்க நிலைமையையேனும் சர்வதேசிய நிலைமையையேனும் கொண்டு அதன் மக்களுக்கிடையே பாகுபாடு செய்யப்பட மாட்டாது.

**பிரிவு 3.** ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை, விடுதலை, உடற் பாதுகாப்பு இவைகளில் உரிமையுண்டு.

**பிரிவு 4.** எவரும் அடிமைத்தனத்திலேயோ, அல்லது ஆட் பணியிலேயோ ஆழ்த்தப்படார்: அடிமையும், அடிமை வணிகமும் எவ்வடிவில் தோன்றினும் தொடர்ந்து துடைக்கப்படும்.



**பிரிவு 5.** எவரும் சித்திரவதை அல்லது கொடிய கண்ணற்ற இழிந்த நடத்தைக்கோ அன்றி தண்டனைக்கோ ஆட்படுத்தப்படார்.

**பிரிவு 6.** சட்டத்தின் முன்பு எவரும் தம்மைப் பிறர் எங்கும் மனிதராக மதிக்குமாறு செய்ய உரிமை பெறுவர்.

**பிரிவு 7.** சட்ட முன்னிலையில் யாவரும் சமமானவர்கள். அச்சட்டத்தின் பாரபட்சமான பாதுகாப்பை அவர்கள் எல்லாரும் ஏற்றத்தாழ்வின்றிப் பெற உரிமை உடையவர்களாவர். இந்த அறிக்கைக்கு விரோதமாக எவ்விதத்திலேனும் பாரபட்சமான முறையில் மக்கள் நடத்தப்பட்டாலும், அத்தகைய பாரபட்ச முறை எவ்விதத்திலேனும் தூண்டப்பட்டாலும் அதற்கெதிராக இதனுற் பாதிக்கப்படும் சகலரும் சமத்துவமான பாதுகாப்புப் பெற உரிமையுடையவராவர்.

**பிரிவு 8.** அரசியலமைப்பு அல்லது சட்டம் என்ற இவை வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு முரணைகத் தோன்றும் செய்கைகளுக்குத் தகுதி மிகு நாட்டியல் நடுவர்குழுவால் (Tribunal) பரிகாரம் தேடிக்கொள்ள உரிமையுண்டு.

**பிரிவு 9.** நினைத்தபடி கைது செய்தல், காரணங்காட்டாது சிறையிட்டல் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப் படார்.

**பிரிவு 10.** ஒருவரது உரிமையைப் பற்றியோ, கடமையைப் பற்றியோ அன்றி தண்டனைக் குற்றச் சாட்டைப்பற்றியோ முடிவு செய்யுமுன் சுதந்திரமான ஒருபாற் கோடாத நடுவர்குழு முன் நேர்மையான பொதுமன்றத் தீர்ப்பு வேண்ட எவருக்கும் சரிநிகர் உரிமையுண்டு.

**பிரிவு 11.**—*(1)* தற்காப்பு எதிர்வாதத்திற்கு வசதியளிக்க உறுதி கூறும் சட்ட இயல்புளி நடக்கும் பொதுமன்ற விசாரணையில் குறிப்பிட்ட குற்றம் மெய்பிக்கப் படும் வரை தண்டனைக் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு குற்றமும் அற்றவர் என்றே கருதப்படுவர்.

*(2)* அப்பொழுதைய நாட்டியல் அல்லது அனைத்து நாட்டியல் நடைமுறைச் சட்டப்படி ஒருவருடைய செய்கையோ அன்றி செய்யாமையோ அது நிகழும் காலத்தில் தண்டனைக் குற்றமாகாதெனில், அதனை செய்தார் குற்றவாளியாகக் கருதப்படார். அன்றியும் அப்பொழுதைய விதிப்படிப் பொருந்தும் தண்டனையை விடக் கடுமையான தண்டனையும் வழங்கப் படார்.

**பிரிவு 12.** ஒருவனது அந்தரங்கம், குடும்பம், இல்லம், கடிதப் போக்குவரத்து ஆகியவை பிறரது நினைத்தபடி தலையீட்டுக்கு உட்படா. அன்றியும் ஒருவனது பெருமையும், புகழும் தாக்கப்படா. இத்தகைய தலையீடுகளிலிருந்து தம்மை சட்ட மூலமாகக் காத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இத்தகைய தலையீடுகள் அல்லது தாக்கல்களிலிருந்து தன்னை சட்ட மூலமாகக் காத்துக் கொள்ள ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு.

**பிரிவு 13.**—*(1)* நாட்டு எல்லைக்குள் விரும்பியவாறே எங்கும் போகவோ, குடியிருக்கவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

*(2)* ஒவ்வொருவருக்கும் தன் நாட்டை, அல்லது எந்நாட்டையும் விட்டு அகலவோ அவைகளுக்குத் திரும்பவோ உரிமையுண்டு.

**பிரிவு 14.**—*(1)* அலைப்புப் பிடியிலிருந்து அகலவும், பிற நாட்டை ஏற்ற புகலிடமாகத் தேடிக்கொள்ளவும், அங்கிருந்து இன்பம் நுகரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

*(2)* உண்மையாகவே அனைத்து நாட்டியல் நோக்கத்திற்கும், கொள்கைக்கும் முரணைகத் தோன்றுவனவும் அரசியல் குற்றமாகாதனவுமான தொடர் வழக்குகள் பற்றி இவ்வுரிமைகள் வற்புறுத்த மாட்டா.

**பிரிவு 15.**—*(1)* நாட்டியலில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

*(2)* எவரும், தம் நாட்டியலில் தான் தோன்றித்தனமாக மறுக்கப்படார்; அன்றியும் அதனை மாற்றிக்கொள்ளவும் தடை செய்யப்படமாட்டார்.

**பிரிவு 16.**—*(1)* இனம், நாட்டியல், சமயம் என்ற இவைகளின் பிடிப்பிலிருந்து நீங்கி வயது வந்த ஆண் பெண் எவரும் விரும்பியவாறே மணம் புரிந்து இல்வாழ உரிமையுண்டு. அவர்களுக்குத் திருமண விடயத்திலும், மண வாழ்க்கையின் போதும், மண விலக்கு (மண முறிவு) விடயத்திலும் சம உரிமையுண்டு.

*(2)* மணக்க விரும்பும் இருபாலரது சுதந்திரமான முழு இசைவும் பெற்ற பின்பே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப் படும்.

*(3)* குடும்பம், சமுதாயத்தின் இயல்பாக அமைந்த அடிப்படைக்குழு



ஆதலின், அதற்குச் சமுதாயம் அரசு என்ற இவைகளின் பாதுகாப்பைப் பெற முழு உரிமையுண்டு.

**பிரிவு 17.**—*(1)* ஒவ்வொருவருக்கும் தனியாகவோ, சேர்ந்தோ சொத்துடைமை கொள்ள உரிமையுண்டு.

*(2)* முறைகேடான நிலையில் எவருடைய பொருளும் கவர்ந்து கொள்ளப் படமாட்டாது.

**பிரிவு 18.** ஒவ்வொருவருக்கும் தம் கொள்கையையும், எண்ணத்தையும் சமயத்தையும் பின்பற்ற உரிமையுண்டு. இந்த உரிமை, சமயத்தை மாற்றிக் கொள்ளவும், தனியாகவோ அல்லது கூடியோ சமயக் கோட்பாட்டையோ நம்பிக்கையையோ வெளிப் படுத்துவதற்கும், பின்பற்றுவதற்கும், வணங்குவதற்கும், வழிபடுவதற்கும் உரிமையுண்டு.

**பிரிவு 19.** ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும், எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமை எத்தகைய தடையுமின்றி, ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய செய்திகளையும் கருத்துக்களையும் எந்த நாட்டிலிருந்தும் எந்த முறையாலும் பெற்றுக்கொள்வதற்கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு.

**பிரிவு 20.**—*(1)* ஒவ்வொருவருக்கும் அமைதியான முறையில் கூடுவதற்கும், கழகம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

*(2)* எந்தக் கழகத்திலும் சேரும்படி எவரையும் கட்டாயப் படுத்த உரிமையில்லை.

**பிரிவு 21.**—*(1)* ஒவ்வொருவரும் தங்களுடைய நாட்டாட்சியில் நேராகவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (Representatives) மூலமாகவோ, பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமையுண்டு.

*(2)* ஒவ்வொருவரும் அரசியல் அலுவல்களிலே சமமான பங்கு பெற உரிமையுண்டு.

*(3)* உலகம் ஒப்புக்கொள்ளும் முறையில் மறைமுக வாக்குரிமையாலோ அல்லது அது போன்ற வேறு வழி ஒன்ருலோ காலத்திற்குக் காலம் நடத்தப் படும் தேர்தல்களின் மூலம் வெளியாகும் மக்களின் எண்ணத்தின்படி ஆட்சியின் அடிப்படை அமையும்.

**பிரிவு 22.** ஒவ்வொருவருக்கும் நாட்டியல் முயற்சியினுலும் கூட்டு நாட்டியல் ஒற்றுமையினுலும் அந்தந்த நாட்டின் அமைப்புக்கும், பொருளாதார நிலைமைக்கும் தகுந்தபடி சமுதாயப் பாதுகாப்பு உறுதி அளிக்கப்படும். அதற்கேற்ப ஒருவருடைய வாழ்வும், பண்பும் உயர்வதற்கு வேண்டிய பொருளாதார, சமுதாய, கலை பண்பு உரிமைகள் காப்பாற்றப்படும்.

**பிரிவு 23.**—*(1)* ஒவ்வொருவருக்கும் தமக்கு விருப்பமான வேலையில் அமர்வதற்கும், நலந்தரும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

*(2)* ஒவ்வொருவருக்கும் எத்தகைய வேறுபாடுமின்றி தம் தம் வேலைக்கேற்ப ஊதியம் பெற உரிமையுண்டு.

*(3)* வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் தேவையானபோது சமுதாயப்

பாதுகாப்பு அளிப்பதுடன் மக்கள் வாழ்க்கையின் மதிப்பிலே ஒவ்வொருவரும் அவரவர் குடும்பங்களும் வாழ்வதற்கேற்ற ஊதியம் பெறும் உரிமையுண்டு.

(4) ஒவ்வொருவருக்கும் தம் தம் நலனைக் காப்பாற்றிக் கொள்ள வணிகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்கும் அவற்றை அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

**பிரிவு 24.** ஒவ்வொருவருக்கும் வேலை நேரத்தில் வரையறையும், ஓய்வும், விடுபாடும் காலத்திற்குக் காலம் ஊதியத்தோடு பெறும் விடுமுறையும் அடைவதற்கு உரிமையுண்டு.

**பிரிவு 25.**—(1) உணவு, உடை, வீடு, வைத்திய பராமரிப்பு என்பவற்றுடன் தேவையான சமுதாயச் சேவைகளையும் தானும் தன் குடும்பமும் ஆரோக்யமாக நல்வாழ்வு வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுதற்கும் வேலையின்மை, சுகவீனம், அங்கக்குறை, கைம்பெண்ணுதல், மூதுமை அல்லது தன் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஊதியமின்மை ஏற்படும் காலத்தில் பாதுகாப்புப் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.



(2) கர்ப்பிணிகளும் சிசுக்களும் விசேஷ பாதுகாப்புக்கும் உதவிக்கும் உரிமை உடையவராவர். முறைப்படி விவாகமானவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளாயினும் அவர்கள் ஏற்றத் தாழ்வின்றி ஒரே விதமான சமுதாயப் பாதுகாப்பினை அனுபவிக்க உரிமை உடையவர்களாவர்.

**பிரிவு 26.**—(1) ஒவ்வொருவருக்கும் படிப்பதற்கு உரிமையுண்டு. முதல் நிலை கல்வியும், அடிப்படைக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும். அடிப்படைக் கல்வி கட்டாயமாக வற்புறுத்தப்படும். பொதுவாக, தொழிற் கல்வியிலும் நுட்பக் கல்வியிலும் எல்லோருக்கும் சமமாக வாய்ப்பளிக்கப்படும். உயர்நிலை கல்வி தகுதியின் அடிப்படையிலே வழங்கப்படும்.

(2) அடிப்படை உரிமைகளையும், மனிதரது உரிமைகளின் மதிப்பையும் பெருக்கவும், மனிதரது பண்பாட்டை நிறைக்கவும் ஆன முறையில் கல்வியின் போக்கு அமையும். அது ஒற்றுமையையும், நட்பையும் நாடுகளுக்குள்ளும் இனத்திற்குள்ளும், கூட்டத்திற்குள்ளும் வளர்த்து அமைதியை நிலைநாட்டும். ஐக்கிய நாட்டின் முயற்சியையும் ஓங்கச் செய்யும்.

(3) பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி வகையைப் பற்றி முன்கூட்டியே முடிவு செய்ய முழு உரிமையும் உண்டு.

**பிரிவு 27.**—(1) ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தின் கலை வாழ்விலே கலந்து கொள்வதற்கும், கலையிலே ஈடுபடுவதற்கும், அறிவியல் துறை முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்கும் அதன் பயனைப் பெறுவதற்கும் உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தங்களால் வெளியிடப்பட்ட அரசியல், விஞ்ஞான இலக்கிய உண்மைகளினால் வரும் பெயரையும், பொருளையும் பாதுகாத்துக் கொள்ள உரிமையுண்டு.


**பிரிவு 28.** இந்த அறிக்கையில் கண்டபடி நாட்டிற்கும், உலகத்திற்கும் பொதுவான அமைப்புக்களால் உரிமைகளை அடைவதற்கு, ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**பிரிவு 29.**—(1) ஒவ்வொருவரதும் சுபாவம் கட்டுப்பாடின்றிப் பரிபூர்ணமாக அபிவிருத்தி யடைதற்குரிய ஒரே ஒரு சாதனம் அவரவரது சமூகமே ஆதலின் அவ்வச் சமூகத்துக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.

(2) ஒவ்வொருவரும் தன் தன் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்குங்கால் அவர்களது கருமங்களைக் கட்டுப்படுத்துவனவாய செயல்கள், மற்றவர்களது உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அளிக்க வேண்டிய கணிப்பினையும் மதிப்பினையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் மாத்திரம் சட்டபூர்வமாக நிருணயிக்கப்பட்டனவாயும், ஓர் சனநாயக சமுதாயத்தின் ஒழுக்கம், பொது சன அமைதி, பொதுச் சேமாபிவிருத்தி என்பவற்றுக்கு நீதி நியாயப்படி வேண்டிய அளவினவாயும் இருக்கும்.

(3) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்து நோக்கங்கள் கொள்கைகளுக்கு முரணாக இவ் வுரிமைகளையும் சுதந்திரங்களையும் எவ் விடயத்திலேனும் பிரயோகிக்கவொண்ணாது.

**பிரிவு 30.** இவ் வறிக்கையில் கண்ட உரிமைகளையோ, விடுதலைப் பேறுகளையோ அழிக்க வேண்டி எதனையேனும் செய்யவோ, அத்தகைய இயக்கத்தில் ஈடுபடவோ, எந்த நாட்டுக்கும், எந்த குழுவினுக்கும், எந்த மனிதனுக்கும் உரிமையளிக்கும் குறிப்புடையதாக இந்த அறிக்கையில் உள்ள எதற்கும் பொருள் செய்தலாகாது.





# கண்களைக் குளமாக்கும் கதைகள்!

## புயலில் சிக்கியவர்கள் கூறியது!

சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர புயல் வெள்ளத்தால் நாகை நகரில் மட்டும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் நாசமடைந்தன.

இந்தப் பயங்கரப் புயல் பற்றி நாகையைச் சேர்ந்த 70 வயது கிழவர் ஒருவர் கூறியதாவது :

''கடந்த 11-ஆம் தேதி நள்ளிரவில் நாகைத்துறைமுகத்தில் புயல் அபாயஅறிவிப்பு எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது. எச்சரிக்கைக் கூண்டு கொடி மரத்தில் ஏற்றப்பட்டதுமே, அந்தக் கூண்டு, கொடி மரத்துடன் முறிந்து விழுந்தது.

"உடனே அபாய அறிவிப்பு மணி அலறத் தொடங்கியது. துறை முகத்தில் உள்ள அபாய அறிவிப்புச் சங்குகளும் தொடர்ந்து ஒலித்தன. அதைத் தொடர்ந்து பேரிரைச்சலுடனும், பெரும் வேகத்துடனும் புயல் காற்று வீசியது.

''காற்று வீசியபோதுதான் நான் தங்கியிருந்த வீட்டிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தேன். என் தலையையே அறுத்துச் செல்லும் வேகத்தில் காற்று வீசியதால் உடனே வீட்டுத் தரையில் மல்லாந்து விழுந்து விட்டேன்.

"பேய்க் காற்றில் வீடுகள் 'படார்','படார்' என்று இடிந்து விழும் சத்தம் கேட்டது. நான் இருந்த வீடும் இடிந்து விடுமோ என்ற பயத்தில் மெதுவாக எழுந்து ஜன்னல் வழியே பார்த்தேன்.

''ஓடுகளும், வீட்டுக் கூரைகளும், 'ஆஸ்பெஸ்டாஸ்' மேற்கூரைகளும் அப்பளம் போல் நொறுங்கி விழுந்து கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து நகரை இருள் கப்பிக் கொண்டது. நாகை நகரமே கடலுக்கு இரையாகிவிடுமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன்''

நாகை கடற்கரைச் சாலை அருகே வசித்த ஒருவர் இந்தப் பயங்கரப் புயல் பற்றிக் கூறியதாவது:

''புயல் வீச ஆரம்பித்த உடனேயே கடலில் கொந்தளிப்பு அதிகரித்தது. வழக்கமாகக் கடலில் கிளம்பும் அலைகளை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், புயல் வீசியபோது எழுந்த அலைகள் கடலில் மிதக்கும் கப்பல் உயரத்திற்கும் சில சமயங்களில் இரண்டு கப்பல்களின் உயரத்துக்கும் எழுந்தன.

''இதனால் துறைமுகத்தின் அருகிலுள்ள உப்பாற்றினுள் கடல் நீர் புகுந்தது. கடலும் உப்பாறும் ஒன்றாகிவிட்டன. இந்த நிலையில் பேய் மழை கொட்டத் தொடங்கியது.

"உப்பாற்றில் புகுந்த வெள்ளம் கட்டுக் கடங்காமல் கண்ட திசைகளிலும் கரை புரண்டு ஓடியது. அந்த ஆற்றின் ஓரத்தில் பல இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த மின் சாரப் படகுகளும், தோணிகளும் தாறுமாறாக ஓடித் தண்ணீருக்குள் மூழ்கின.''

## ஏழு பேர் கொண்ட குடும்பமே பலியாகியதை நேரில் பார்த்தவர் கூறியது !

வேளாங்கண்ணி அருகே பாப்பா கோயில் என்ற கிராமம் இருக்கிறது.

அங்கு, உயிர் தப்பிய திரு சுப்பிரமணியம் என்ற வாலிபர் நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

அவர் கூறிய சோகக் கதை விவரம் வருமாறு :

''நான் மில்லில் வேலை செய்கிறேன். மில் டிரைவர் குடும்பம் புயலுக்குப் பயந்து மில்லுக்குள் ஓடியது. புயல் பயங்கரமாக அடித்துக் கொண்டு இருந்தது. அவரது குடும்பத்தில் மொத்தம் 7 பேர் இருந்தனர்.

''மில்லுக்குள் இருப்பது அவ்வளவு பாதுகாப்பாக இருக்காது என்பதை நான் உணர்ந்து, அவர்களை அங்கிருந்து அழைத்து வர ஓடினேன்.

''புயல் காற்று ஓயட்டும் போகலாம் என்று டிரைவர் கூறினார். ஆனால் காற்று ஓய்வதற்கு முன்பு மில் கட்டடம் சட சட வென்று இடிந்து விழுந்தது.

''அய்யோ! அய்யோ! என்ற அலறல் சப்தம் கேட்டது.

''நான் மயக்கமுற்று வீழ்ந்து விட்டேன். மயக்கம் தெளிந்து விழித்துப் பார்த்தேன். நான் மட்டும் தப்பித்தேன்! என் கண் முன்னே அந்தக் குடுபம் முழுவதும் பலியாகி விட்டது!'' என்று கூறினார் திரு சுப்பிரமணியம்.

## இளம் மனைவியை இழந்தவர் கூறியது!

மாரம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்த ஈசாக் என்பவர், மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு காளிமுத்து அவர்களைக் கண்டதும் தேம்பித் தேம்பிக் கதறி அழுதார். அவர் அழுகையை நிறுத்த நெடுநேரம் ஆயிற்று!

திருமணமாகி 75 நாட்களில் தன் இளம் மனைவி இன்ப மேரியை வெள்ளம் அடித்துச் சென்ற சோகக் கதையை ஈசாக் விவரித்தார்.

''எனக்குக் கல்யாணமாகி 75 நாட்கள் தான் ஆகின்றது. இரவில் திடீரென்று பேரிரைச்சல் கேட்டது. நான் முதலில் விழித்துக் கொண்டு எனது மனைவியை எழுப்பினேன். கதவைத் திறந்து பார்த்தோம். வெளியே வெள்ளக் காடாக இருந்தது. அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து 'ஓ' என்ற அலறல் கேட்டது. பயத்தால் நடுங்கிய எனது மனைவி என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

''நாங்கள் வெளியே ஓடினோம். ஒரே இருட்டு ; ஒன்றும் தெரியவில்லை. முள் மரத்தில் மோதினோம். அப்போதும் என் மனைவி என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அதன் பிறகு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நாங்கள் பல மரங்கள், புதர்களில் மோதி இழுத்து செல்லப்பட்டோம். அதன் பின் என் மனைவி வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டாள். நான் எப்படியோ தட்டுத் தடுமாறி மேட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தேன்.

இவ்வாறு அழுது கொண்டே ஈசாக் தனது சோகக் கதையைச் சொன்னார்.

## குடும்பத்தையே இழந்தவர் கூறியது!

மாரம்பட்டியைச் சேர்ந்த வேளாங்கண்ணி ஆரோக்கியம் என்பவர் கூறியதாவது:

''வெள்ளம் வந்தவுடன் என் குடும்பத்தைச் சேர்ந்த சந்தியாகு, ஜஸ்டின், ஆரோக்கியம் ஆகிய நாங்கள் வீட்டை விட்டு வெளியேறி மேடானப் பகுதிக்கு ஓடினோம்.

''வெள்ளத்தின் கோரப் பிடியில் சிக்கிய எனது குடும்பத்தினர் அனைவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

''நான் ஒரு பனைமரத்தைப் பற்றினேன். அந்த மரமும் சாய்ந்தது. அதற்குப் பிறகு ஒரு தென்னை மரத்தைப் பற்றினேன். அதுவும் சாய்ந்தது. இப்படி மரங்களையும், புதர்களையும் பற்றி ஒருவாறாக உயிர் தப்பினேன்''.





## தாய் தந்தையரை இழந்தவர் கூறியது!

வேளாங்கண்ணி அருகே, தெற்குப் பொய் யூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தைச் சேர்ந்த ஐசக் செல்லதுரை தன் தந்தை, தாய் இருவரும் இறந்த விவரத்தைக் கூறினர்.

இடது கால் முறிந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அவர் கூறியதாவது :

''என் தந்தை பெயர் இஸ்ரேல். தாயார் பெயர் நேசமணி.

''புயல் அடித்த அன்று நானும், எனது தந்தையும் எங்கள் வீட்டு முன் புறத்தில் கட்டிலில் படுத்து இருந்தோம். காற்று விர் விர் என்று அடிக்க ஆரம்பித்தது. கட்டிலே பறப்பது போல இருந்தது.

''நாங்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனேம். அம்மாவும் அப்பாவும் ஒரு சுவர் ஓரத்தில் இருந்தனர். என் தம்பியும் தங்கச்சியும் மற்றோர் புறத்தில் இருந்தனர்.

''இரவு 2.35 மணிக்கு வீடே கிடுகிடு என்று ஆடியது.

''எங்கள் வீட்டைச் சுற்றிப் பனை மரங்கள் இருக்கின்றன. அவைகள் முறிந்து விழும் சப்தம் கேட்டது.

''வெளியே போனல் பனை மரம் வீழ்ந்து இறந்து விடுவோமே என்று வெளியே வரப் பயந்தோம்.

''அப்போது வீடு ஒரு பக்கத்தில் பிளந்து வீழ்ந்தது. (இதைச் சொல்லும்போது அவரது கை கால்கள் ஆட, குரல் நடுங்கியது! கண்ணீர் வழிந்தது!)

''அம்மா, அப்பாவின் 'அய்யோ!' என்ற குரல் கேட்டது. என்னுடைய கால்கள் இடிந்த சுவரில் மாட்டிக் கொண்டு விட்டன என்னல் எழ முடியவில்லை. நானும் அலறிக் கொண்டே இருந்தேன்.

''3 மணி நேரம் அப்பா அம்மாவின் சப்தம் கேட்டது. பிறகு நின்றுவிட்டது.

''காலையில் ஊரார் வந்து அந்த இடிபாடு களைத் தோண்டி எடுத்தனர். அப்பா இறந்து கிடந்தார். அம்மா என்ன ஆனள் என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை.

''என்னை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து விட்டனர். அப்பாவை அடக்கம் செய் ததைக் கூட நான் பார்க்க முடியவில்லை.

''என் தம்பி, தங்கை பிழைத்துக் கொண்டு விட்டார்கள். அம்மாவையும், அப்பா வையும் புயல் பலி கொண்டுவிட்டது'' என்று கூறிக் கண் கலங்கினர்.

## காற்றில் பறந்த குழந்தையைக் கண்டவர் கூறியது!

சுழன்று அடித்த சூறாவளிக் காற்றில் 3 வயது ஆண் குழந்தை ஒன்று பறந்து சென்றது. மறுநாள் அந்தக் குழந்தையின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வேளாங்கண்ணியில் நடந்தது. வேளாங்கண்ணிப் பகுதி கோரப் புயலுக்கு ஆளாகியது.

''மாதா கோயிலைச் சுற்றி இருந்த கிராம மக்கள் அந்தக் கோயிலில் அடைக்கலம் புக ஓடி வந்தனர்.

''ஜேம்ஸ் என்பவரின் குடும்பம் அதில் ஒன்ருக இருந்தது. அவரும், அவரது மனைவி யும் இரண்டு குழந்தைகளோடு ஓடி வந்தனர்.

''ஒரு குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொண்டு, மற்ரேர் 3 வயது ஆண் குழந்தையை கையில் பிடித்தபடி ஜேம்சின் மனைவி ஓடி வந்தார்.

''100 கிலோ மீட்டர் வேகத்தில் கோரப் புயல் சுழன்று அடித்தவண்ணம் இருந்தது. சுழன்று அடித்த புயல் அந்த 3 வயதுக் குழந்தையைப் பறித்துச் சென்று விட்டது.

''குழந்தை காற்றில் பறந்து விட்டது! தாய் பதறினள்! ஆனலும் ஒன்றும் செய்ய முடியவில்லை!

''மறுநாள் அந்தக் குழந்தையின் உடல் கண்டு பிடித்து எடுக்கப்பட்டது'' என்று கூறி னர்கள்.

## மரக்கிளையில் சிக்கிப் பிழைத்தவர் கூறியது!

வெள்ளத்தில் மனைவி, மகன்களைப் பறி கொடுத்த ஒரு வாலிபர் வெளியிட்ட தகவல் கள் உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது!

வெள்ளம் வந்தபோது விளைந்த விபரீதம் பற்றி வேடசந்தூரைச் சேர்ந்த திரு வேலா யுதம் என்பவர் கூறியதாவது :

''அன்று இரவு 7 மணி இருக்கும். மழை கொட்டிக் கொண்டிருந்தது. இதற்கு முன் இது போன்ற மழையை நான் பார்த்தது இல்லை. என் மனத்தில் ஒரு வித அச்சம் ஏற்பட்டது.

''அதே நேரத்தில் வெளியே மழை வெள் ளம் ஓடிக் கொண்டு இருந்தது. இதனல் என் மனைவி மூக்காயி, மகன் பிச்சை மூத்து (15), மற்றெரு மகன் ராமமூர்த்தி (13),

மகள் வெங்கடம்மாள் (11), கடைசி மகன் துரையரசு (6) ஆகியோரை அழைத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குச் சென்றேன்.

''அடுத்த வீட்டில் ராமசாமி அவரது மனைவி வீரம்மாள், மகன் கருப்புச்சாமி, மகள் ராணி ஆகியோர் இருந்தார்கள். இரண்டு குடும்பத்தினரும் பயந்து கொண்டே இருந்தோம்.

''திடீர் என்று வீட்டுக்குள் வெள்ளம் வரத் தொடங்கியது. உடனே நானும், ராமசாமியும் அவரவர் குடும்பத்தை வீட்டுக் கூரை மீது ஏற்றி உட்கார வைத்துவிட்டு நாங்களும் ஏறிக் கொண்டோம்.

''அந்த நேரத்தில் வேறு வழி எதுவும் கிடையாது. பிள்ளைகள் குளிராலும் மழையாலும் 'வெட வெட' என்று நடுங்கினார்கள். அழுதார்கள்,

''யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் நானும் ராமசாமியும் திகைத்தோம்.

''சற்று நேரத்தில் எங்கள் குடிசை வெள்ளத்தில் மிதந்து செல்லத் தொடங்கியது. பல இடங்களில் அந்தக் குடிசை, சுழன்று சென்ற போது, எங்கள் உயிர் போய்த்திரும்பி வந்தது போல் இருந்தது.

''ஏறத்தாழ 2 பர்லாங் தூரம் சென்ற பிறகு, கூட்டாறு என்ற காட்டாறு சங்கமம் ஆகும் இடத்தில் வேகமாக எங்கள் குடிசை சுழன்றது! அப்படியே வெள்ளத்தில் அமிழ்ந்து விட்டது.

''நான் இரு கைகளாலும் கிடைத்தவர்களைப் பிடித்துக் கொண்டேன். என் இரண்டு மகன்களும் என் கைக்குக் கிடைத்தார்கள். மற்றவர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டார்கள்.

''மூக்காயி, ராமமூர்த்தி, வெங்கடம்மாள் 3 பேரும் வெள்ளத்தில் பிணமானார்கள். பக்கத்து வீட்டு வீரம்மாளும், ராணியும் வெள்ளத்தோடு போய்விட்டார்கள் என்பதை பின்புதான் ராமசாமி சொன்னதன் பேரில் தெரிந்து கொண்டேன்.

''நான், பிச்சைமுத்து, துரையரசு ஆகிய 3 பேரும் ஒரு பனை மரத்தைத் துணையாகக் கொண்டு தொத்திக் கொண்டு இருந்தோம். என் தோளில் துரையரசை வைத்து இருந்தேன். சற்று நேரத்தில் அந்தப் பனைமரமும் சாய்ந்து விட்டது. 3 பேரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டோம்.

''தோளில் இருந்த துரையரசு வெள்ளத்தில் விழுந்து விட்டான். உடனே அவனை வலது கையில் அணைத்துப் பிடித்தபடியே ஏதாவது தென்படுகிறதா என்று பார்த்தேன். அதே நேரத்தில் என் மகன் பிச்சை முத்து ஒரு பனை மரத்தைப் பிடித்துக் கொண்டதாகச் சொன்னான்.

''நான், அவன் எந்த திசையில் இருக்கிறான் என்று கூடத் தெரியாத நிலையில் 'அய்யா, என் பெயரைச் சொல்ல நீ ஒருவனாவது பிழைத்துக் கொள்ளப்பா!'' என்று சொன்னபடி துரையரசை அணைத்துக் கொண்டே வெள்ளத்தில் போய்க் கொண்டு இருந்தேன்.

''சிறிது நேரத்தில் மரக் கிளையில் சிக்கிக் கொண்டேன். நல்ல வேளை இனி பிழைத்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டேன். துரையரசை நல்ல உயரமான கிளையில் உட்கார வைத்து விடலாம் என்று கூட பார்த்தேன்.

''அந்தக்கிளையில் முள் செடிகளும், கூரைகளும் சிக்கி இருந்தன. ஒரு பிணமும் சிக்கி இருந்தது. மனிதனின் பிணமோ மாட்டின் பிணமோ தெரியவில்லை. அந்தப் பிணத்தின் மீது என் மகனை அணைப்பாக வைத்து விட்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

''ஆனால் 5 நிமிடம் கூட நிம்மதி நீடிக்கவில்லை. கடல் அலை போல் பொங்கி வந்த வெள்ளம் என்னையும், என் மகனையும் பிரித்து விட்டது. 'அப்பா!' என்ற ஒரே சத்தம்தான் கேட்டது. அப்புறம் என் அருமை மகனின் குரலைக் கேட்க முடியவில்லை. அவன் போய் விட்டான்.

''நாமும் தொலைந்தோம்'' என்று எண்ணிக் கொண்டேன். எந்தப் பக்கமும் நீந்திச் செல்ல முடியாது என்பது போல, திசையும் தெரியவில்லை. ஆனால் குடகனாறு அணைப்பக்கம் நான் இருப்பதை மட்டும் உணர முடிந்தது.

''வெள்ளத்தில் வேகமாக நான் இழுத்துச் செல்லப்பட்டேன். சிறிது நேரத்தில் 20 பேர் சேர்ந்து ஒரு ஆளை எப்படி வீசுவார்களோ அப்படி நானும் வீசப்பட்டேன். ஏதோ தெய்வச் செயல் என்று நினைக்கிறேன். குடகனாறு அணை மதகுப் பக்கம் நான் தூக்கி வீசப் பட்டேன்.

''அப்போது இரவு 2 மணி இருக்கும். அங்குள்ள அறைகளில் யாரும் இல்லை. வேட்டிகள் இருந்தன. அவற்றை எடுத்துப் போய் போர்த்திக் கொண்டு, அங்கு இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, நம் குடும்பத்தைச் சேர்ந்த யாராவது கிடைக்க மாட்டார்களா என்று விடிய விடியப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

''3-30 மணி அளவில் அணைப் பகுதி உடையும் பயங்கரச் சத்தம் கேட்டது. இனி நாமும் தொலைந்தோம் என்று பயந்து கொண்டே இருந்தேன்.

''பொழுது விடிந்தது. வெள்ளம் சிறிதளவு குறைந்து இருந்தது. பக்கத்து கிராமத்துக்காரர்கள் மற்றும் சிலர் அங்கு வந்தார்கள்.

''நான் என் கதையைச் சொன்னேன். அவர்கள் தங்கள் கதைகளைக் கூறினார்கள். என் மகன் பிச்சை முத்து தென்னை மரத்தில் இருப்பதாகச் சொன்னேன். அவர்களோ அந்தச் சிறு பையன் இவ்வளவு நேரம் வெள்ளத்திற்குத் தாக்குப் பிடித்து இருக்க மாட்டான். மரமும் இருக்காது என்று சொல்லி என்னைக் கூட்டிக் கொண்டு சென்றார்கள். என் மனம் கேட்காமல் வழியில் திரும்பித் திரும்பி தென்னை மரங்களில் எல்லாம் பார்த்தேன். என் மகனைக் காணவில்லை.

''அழுதுகொண்டே ராஜா கவுண்டனூரை அடைந்தேன். அங்கே என் மகன் பிச்சை முத்துவைப் பார்த்தேன்!

''அப்பா! அம்மா போய்விட்டார்கள். நான் மட்டும் தப்பி வந்தேன்!'' என்று அங்குள்ளவர்களிடம் சொல்லி அழுது கொண்டு இருந்தான். என்னைப் பார்த்ததும் 'ஓ' என்று கதறி அழுதான். நானும் அழுதேன்.


காற்று நீகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான
அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன
டிசைன்கள்—யமுனா, அஜந்தா,
சாமுண்டி-உள்ளங்கவர்
வகைகள்—பரவசமூட்டும்
வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட சேலைகள் இன்றைய
நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி





# தமிழ்நாட்டு அறிவு

—திரு.வி.க

ஆச்சாரியார் அறிவு, நுண்ணியது; கூரியது; சிந்தை ஆழச் செல்வது; நியாய வாதம் வன்மையது. இராஜதந்திரம் அவர் அறிவுக்கும் சிந்தனைக்கும் வாதத்துக்கும் அகழியாக நிற்கும். தங்கோள் நிறுத்துவதில் ஆச்சாரியார் பேர் பெற்றவர். எனது அரசியல் வாழ்க்கை அவருடனும் உறவு கொண்டது.

எனது அன்பு ஒவ்வொரு தேச பக்தரை ஒவ்வொரு விதமாகச் சிறப்பித்துப் பேசும்; எழுதும். அவ்வன்பு இராஜகோபாலாச்சாரியாரை எப்படிப் பேசும்? எழுதும்? ஒரு முறை வஜபதிக்கும், ஆச்சாரியார்க்கும் பத்திரிகையில் வாக்கு வாதம் நடந்தது. அதைப்பற்றி 'நவசக்தி'யில் என் கருத்தைத் தெரிவிக்கப் புகுந்தேன். அப்பொழுது வஜபதியைப் பாஞ்சால சிங்கம் என்றேன் ஆச்சாரியாரைத் தமிழ் நாட்டு அறிவு என்றேன்.

சக்கரவர்த்தி இராஜபோலாச்சாரியாரின் சென்னை உறைவிடம் 'திலகர் பவனம்' ஆயிற்று. இப்பவனத்துக்கு அணித்தே 'தேச பக்தன்' நிலையமிருந்தது. அவ்வணிமை ஆச்சாரியாரையும், என்னையும் அடிக்கடி சந்திக்கச் செய்யும். அச்சந்திப்பு ஆச்சாரியாரைத் தொழிலாளர் இயக்கத்திலும் ஈடுபடுத்தியது.

ஆச்சாரியாரைச் சென்னைக்கு அழைத்தது எது? வக்கீல் உலகம். அந்தப் பெரிய வக்கீல் உலகம் ஆச்சாரியாரை ஹைகோர்ட்டில் சில காலமாதல் வாதிக்க விடுத்ததா? இல்லை. இங்கேயே மனித முயற்சிக்கு மேம்பட்ட ஒரு சக்தியிருத்தல் விளங்குகிறது. அச்சக்தி ஆச்சாரியாரை என்ன செய்தது? அகிம்சா தர்ம தீட்சையில் வேட்கை கொள்ள ஏவியது; சத்தியாக்கிரக யாகத்தில் நாட்டம் பெறச் செய்தது; தியாகியாக்கியது.

'ரௌலட்' மசோதாவை முன்னிட்டுக் காந்தியடிகள் பரத கண்டத்தை வலம் வந்தார்; சென்னைக்கும் வந்தார்; எங்கே தங்கினார்? 'திலகர் பவனத்'தில் தங்கினார். அப்பவனத்தில் தென்னாட்டுத் தேச பக்தியே பொங்கித் ததும்பி வழிந்தது. ஆச்சாரியார் நிலையம் திருவள்ளுவர் விருந்ததிகாரமெனப் பொலிந்தது.

'திலகர் பவனம்' குருந்த மரமாயிற்று. காந்தியடிகள் தட்சணா மூர்த்தியானார். இராஜகோபாலாச்சாரியார்வாதவூரடிகளானார். தீட்சை சூட்மமாக நிகழ்ந்தது. ஆச்சாரியாரின் உடல், பொருள், ஆவியெல்லாம் காந்தீயத்துக்கு அர்ப்பணமாயின.

1917-ஆம் ஆண்டில் சேலத்தில் ஆச்சாரியாரை என் கண் எப்படிப் பார்த்தது? 1919-ல் அக் கண் அவரை எப்படிக் கண்டது? அரசராயிருந்த ஆச்சாரியார், ஆண்டியானார். யான் எப்பொழுதும் ஆண்டி. அதனால் மாற்றம் எனக்கு நன்கு புலனாயிற்று.

இராஜகோபாலச்சாரியாரும் யானும் கதராண்டியானோம்; ஈருடல் ஒருயிரானோம்; சத்தியாக்கிரகப் போர்க் களத்தில் நின்றோம்; போர் புரிந்தோம்; பெரும் போர் புரிந்தோம். ஒருடல் சிறைப்பட்டது; மற்றோருடல் சிறைப்பட வில்லை.

வேலூரில் (4-12-1921) தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரியக்குழுக் கூட்டங் கூடியது. அவ்வேளையில் கூட்டத்திலேயே இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், இராமசாமி நாயக்கர், சுப்பிரமணிய சாஸ்திரியார் முதலிய எல்லோர்க்கும் 144 வழங்கப்பட்டது. எனக்கு மட்டும் அஃது வழங்கப்படவில்லை. அன்று மாலை வேலூர் கோட்டை மைதானத்தில் பெருங்கூட்டம் கூடியது. பேசுவோர் யார்? யான் பேசினேன். என்ன பேசினேன்? 'இப்பொழுது சட்ட மீறல் நடைபெறல் வேண்டும். ஆனால் அது நடைபெறாது. ஏன்? வேலூரில் கதர் மணங்கமழவில்லை. கதர் மணத்திடையே சட்ட மீறல் நிகழ்வது சிறப்பு. இன்னும் ஒரு வாரத்துக்குள் கதர் மணங் கமழ்ந்தே தீர வேண்டும். அம் மணச் சூழலில் நின்று, தேச பக்தர்கள் சட்டமீறுவார்கள்; சிறை புகுவார்கள். ஆதலின் உடனே வேலூர் கதர் அணிவ

தாக; கதர் வண்ணமாவதாக' என்று கருத்துப்படப் பேசினேன்.

வேலூரினின்றுந் திரும்பிய தேச பக்தர் பலர் ஆங்காங்கே சிறைக்கு இரையாயினர். இராஜ கோபாலாச்சாரியாரும், சுப்பிர மணிய சாஸ்திரியாரும் வேலூரி லே கதர் மணங் கமழச் சட்ட மீறிச் சிறை நோக்கினர்.

வேலூரில் அகிம்சா தர்ம தீட்சிதர் காலம் எப்படிக் கழிந் தது? அவர் மற்றோர் அகிம்சா தர்மத் தீட்சிதருடன் உறவு கொண்டார். அவ்வுறவு ஒரு தமிழ் நூலாகியது. ஆச்சாரியார் 'சோக்ரதர்' என்ற நூலுடன் வெளிவந்தார். ஆச்சாரியார் இயற்றிய அவ்வரிய தமிழ் நூல் எனது அணிந்துரையைப் புனைந்து வெளியாயிற்று.



கயை காங்கிரஸுக்குப் பின்னை ஆச்சாரியாரின் பெரும் பொழுது ஆக்க வேலையில் கழிந்தது. திருச் செங்கோட்டுக்கு அருகேயுள்ள புதுப்பாளையத்திலே காந்தி ஆசிர மம் அமைக்கப்பட்டது. அது சோம்பல் நெளியும் ஆசிரமம் அன்று. அது சுறுசுறுப்பும் ஊக்க மும் முயற்சியும் தாளாண்மையும் மதர்த்து நிற்கும் உயிர்ப்பிடம். காந்தி ஆசிரமம் கதர்ச் சுரங்கம் ஆயிற்று. தென்னாட்டிலே கதர் உற்பத்திக்கு அதுவே பெரும் பீட மாயிருந்தது. அந்த நல்லாசிரமம் ஆச்சாரியார் மேற்பார்வையில் நடந்து வந்தது. அக் கதர் சுரங் கத்தை யான் ஒரே முறை பார்த் தேன். அங்கே யான் போன போது ஆச்சாரியார் கையில் 'நாலாயிரம்' இருந்தது. அவ் வேளையில் அரிசிப் பொரிமா வந்தது. அதை அவர் எனக்குங் கொடுத்தார்; தாமும் உண்டார். ஆழ்வார் தமிழ்த் தேனில் கலந்த பொரிமா அமிழ்தென இனித்தது.

## ராஜாஜியின் சொல்லாற்றல்!

ராஜாஜி அவர்கள் சென்னையில் முதலமைச்சராக இருந்தபோது சட்டசபையில் இரண்டு முக்கியச் சட்டங் களைக் கொண்டு வந்தார். ஒன்று, மதுவிலக்குச் சட்டம்; மற்றொன்று விற்பனை வரிச் சட்டம். சட்டம் கொண்டு வருவதற்கு முதல் நாளே பொதுமக்களை அணுகி, அந்தச் சட்டத்தைப் பற்றி விளக்க மாகப் பேசிவிட்டு வருவது அவர் வழக்கமாயிருந்தது.

மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வருமுன் ராயபுரம் 'ராபின்சன்' பார்க்கில் பொதுக் கூட்டம் நடந்தது. திரு. சி. பி. சுப்பையா அதற்குத் தலைமை தாங்கினர். ராஜாஜி பேசினர்:

"முதலில் சேலத்தில் ஏன் மதுவிலக்கைக் கொண்டு வருகிறேன் என்று என்னைப் பலர் கேட்கிருர்கள். சேலம் என் சொந்த ஜில்லா என்பதற் காக அல்ல. சுடச் சுடத் தட்டு நிறையக் கூழ் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறவர்கள், முதலில் ஓரத்தில்தான் விர லால் தடவி எடுத்துச் சாப்பிடு வார்கள். நடுவில் தொட்டால் கையைச் சுட்டுவிடும். அது போல, மதுவிலக்கை அமல் படுத்தும் போதும் உஷாராக இருக்க வேண்டும், ஓரத்திலி ருந்துதான் மத்தியப் பகுதிக்கு வரவேண்டும். சேலம் ஜில்லா ஓரப்பகுதி. ஆகவே, அங்கே முதலில் கை வைத் திருக்கிறேன்."

"விற்பனை வரி பற்றி வியாபாரிகள் பயப்பட வேண் டாம்; அதைக் கொடுக்கப் போகிறவர்கள் வாங்குகிற வர்கள்தான்!" என்பதை விளக்குவதற்காக அன்று அவர் கொத்தவால் சாவடிக் கூட்டத்தில் பேசிய பேச்சு என்றும் மறக்க முடியாத ஒன்று.

கடைசியாக, 1962-ல் அணுகுண்டு சோதனையை நிறுத்த வேண்டும் என்பதற் காக அமெரிக்காவுக்குச் சென்று, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் கென்னடியைச் சந்தித்துப் பேசிவிட்டு வந் தாரே, அப்போது நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "போன காரியம் என்ன ஆயிற்று? காயா, பழமா?" என்று கேட்ட போது, "*If you can coin a new word, you may say not fruitful, but flowerful. The flower may become fruit later on*" என்று கூறினரே, அவரைத் தவிர அப்படி வேறு யாரால் கூறமுடியும்?

### மனித உரிமைகளும் ராஜாஜியும்

மனித உரிமைகள் குறித்து ஐ. நா. பிரகடனம் அதிகாரப்பூர்வ மாக அறிவிக்கப்படுவதற்கு முன்பே அதை மனத்தில் கற்பனை செய்தவர் ராஜாஜி. மேலும் அதை வாழ்க் கையில் அனுசரித்துப் பிரகடனம் செய்தவர்.

—டாக்டர் ஆதிசேஷையா.

## உழவர் பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள்!

தமிழகத்தில் சமீபத்தில் வீசிய பெரும்புயல், பேய் மழை காரணமாக அறுவடை ஆக இருந்த பயிர்ச் சேதத்தை ஈடுகட்டுவதற்காக தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தாளடி, மற்றும் கோடை காலப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்காக மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து மார்ச் மாதம் 10ஆம் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படும்.

''சாதாரணமாக ஜனவரி மாதம் வரைதான் மேட்டூரிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டில் புயல், பெருமழை காரணமாக அறுவடைப் பருவத்திலிருந்த ஏராளமான நெற்பயிர் சேதமடைந்ததால், விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கவும், தாளடி, கோடைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு வசதியாகவும் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விட முடிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மூன்றரை இலட்சம் ஏக்கரில் தாளடி சாகுபடி செய்யவும், திருச்சி, சேலம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் ஐம்பதாயிரம் ஏக்கரில் கோடைக் காலப் பயிர் சாகுபடி செய்யவும், ஆக மொத்தம் நான்கு இலட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து விடப்படும்.

விவசாயிகள் இந்தப் பாசன நீர் வசதியை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டும், அரசுத் தரப்பில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி விதை நெல், பூச்சி கொல்லி மருந்து, உரம் ஆகியவை வழங்கும் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டும், புதிய பயிர்களைச் சாகுபடி செய்ய முன்வர வேண்டும்'' என்று மாண்புமிகு தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

## ஏரி, குளம் சீரமைப்பு

மழை, வெள்ளம் காரணமாக பழுதுபட்ட நீர் நிலைகள், குளங்கள், ஏரிகளின் கரைகளைச் செப்பனிடுவது உள்ளிட்ட பொதுப் பணித் துறை வேலைகளை வருகிற ஜூன் 30ஆம் தேதிக்குள் செப்பனிட்டு முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக என்றே தனியாக இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்தலப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட வேலைகளைத் தாமாக மேற்கொண்டு செய்யலாம் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது. அரசினால் நியமிக்கப்பட்ட பொறியாளர்கள் இந்தப் பணிகளை நிறைவேற்றுவர் என்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் கூறினர்.

## தமிழ்நாட்டில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்றுள்ள சீரமைப்பு—துயர் துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்!

(16—12—1977 தேதிய நிலவரம்)

### 1. சீரமைப்புப் பணிகள்

1. உடைப்புகள் அடைக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட பாசன ஆதாரங்கள் — 7,597
2. செப்பனிடப்பட்ட சாலைகள் — 3,346
3. மீண்டும் தொடர்பு பெற்ற தொலைபேசிகள் — 6,302
4. பழுதுபார்க்கப்பட்ட 'டிரான்ஸ்பார்மர்'கள், மின்சாரக் கம்பங்கள் — 44,269

### 2. துயர்துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்

1. குடிசை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை மானியம் — ரூபாய் 5,39,32,799-50
2. வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேட்டிகள், புடவைகள் — 3,66,601 ஜோடி.
3. வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதி மக்களுக்குப் போடப்பட்டுள்ளத் தடுப்பு ஊசிகள் — 35,23,169
4. சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை உதவி — ரூ. 57,500


# நிதி குவிகிறது!



மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், 10 வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுக்களின் சார்பாகவும், வேளாண்மைத்துறைப் பணியாளர்கள் சார்பாகவும் புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு ரூபாய் 20,06,902.54-க்குரிய காசோலையை 12-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார். இக் காசோலையில் 10 வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுக்கள் அளித்த ரூபாய் 19,30,000-மும், வேளாண்மைத்துறைப் பணியாளர்கள் அளித்த ரூபாய் 49,697-ம் அடங்கியுள்ளன.




தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத்துறைப் பணியாளர்கள் புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு வழங்கிய ரூபாய் 94,141.80-க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழகச் சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் 12-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.



தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை ஆசிரியர்களும், மாணவர்களும், பணியாளர்களும், புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு அளித்த ரூபாய் 3,94,435-க்குரிய காசோலையைத் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு எச்.எஸ்.எஸ். லாரன்ஸ் அவர்கள் 14-12-1977-ல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.


தமிழக வெள்ள நிவாரண நிதிக்காக, கூட்டுறவு நிறுவனங்கள் அளித்த ரூபாய் 10 இலட்சத்திற்குரிய காசோலையை மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் 8-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார்.





திருவாளர்கள் ரிச்சர்ட்சன் அண்ட் குரு தாஸ் லிமிடெட்டின் நிறுவனத்தினர், வெள்ள நிவாரண நிதியாக 18,600 ரூபாய்க்குரிய காசோலையை 9-12-1977 அன்று மாண்புமிகு தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகாவானந்தம் அவர்களிடம் அளித்தனர்.

தமிழக முதல்வர் வசூலிக்கும் வெள்ள நிவாரண நிதிக்காக சென்னை 'தாஜ்கோரமாண்டல்' ஹோட்டலின் பணியாளர்கள், ரூபாய் 3,795-10-க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களிடம் அளித்தனர்.



**வெள்ளம் வடிந்து விட்டது!**
**கண்ணீர் வடிவது நிற்க வில்லை!!**
**அந்தக் கண்ணீரைத் துடைப்பது**
**நம் கடமையல்லவா ?**

## நல்லிதயம் படைத்தோர்
## அள்ளிக் கொடுத்த நிதி !
## 30 நாளில் 2.44 கோடி ரூபாய் !!

இயற்கையின் கடுமையான சீற்றத்திற்கு ஆளாகி அல்லற்படும் மக்களுக்கு உதவிடுவீர் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்., அவர்கள் சென்ற மாதம் 16-ஆம் தேதி வேண்டுகோள் விடுத்தார்.

சென்றமாதம் 17-ஆம் தேதி முதல் இந்த மாதம் 16-ஆம் தேதி வரையான 30 நாட்களில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, 2 கோடியே 44 இலட்சத்து 83 ஆயிரத்து 129 ரூபாய் 71 காசுகளை நல்லிதயம் படைத்தோர் அள்ளிக் கொடுத்துள்ளனர் !

தமிழக முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று, தொடர்ந்து தமிழக மக்கள் மட்டுமல்ல, வெளி மாநில மக்களும் வெள்ள நிவாரண நிதிக்கு அள்ளித் தந்து வருகிறார்கள்.

சமுதாயத்தின் சகல பகுதி மக்களும் பள்ளி மாணவர்களிலிருந்து தொழிலாளர்கள் வரை அனைத்து மக்களும் நிவாரண நிதி வழங்கி வருகிறார்கள்.

**ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று புயல்கள் தோன்றி**
**தமிழகத்தை வெள்ளக் காடாக்கி விட்டன !**
**அந்த வெள்ளத்தினால்,**
**உற்றார் உறவினரை இழந்து,**
**வீடுகளை இழந்து,**
**மாடுகளை இழந்து,**
**ஆடுகளை இழந்து,**
**அறுவடைக்குத் தயாராய் இருந்த பயிரையும் இழந்து**
**இலட்சக்கணக்கானோர் தேம்பி அழுகின்றனர் !**

தேம்பி அழுவோரின் கண்ணீரைத் துடைப்பதற்காக,
தமிழ்நாடு அரசு, துயர்துடைப்புப் பணிகளைப்
'போர்க்காலப் பணிகளைப் போல்' விரைவாகச்
செயல் படுத்தி வருகிறது. மைய அரசும்
தாராளமாக நிதி உதவுவதாக உறுதியளித்துள்ளது.
ஆயினும், நம் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களுக்கு
உதவுவது நம் கடமையல்லவா?

அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்றவர்களின்
கண்ணீர் நிற்க வேண்டுமானால், அவர்களின்
வேதனைகளை விரைந்து தீர்த்திட வேண்டும் !

வேதனைகளை விரைவாகத் தீர்த்திட வேண்டுமானால்,
துயர்துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால்,
அனைவரும் மனமுவந்து நிதியளித்திட வேண்டும் !

**எனவே,**
**பேரன்பு மிக்கோரே! பெற்ற தாய்மாரே!!**
**நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர் !**
**நிதி குறைந்தோர் காசுகள் தாரீர் !!**
**உடல்வலிவுள்ளோர் உழைப்பினைத் தாரீர் !!!**
**ஏனையோரெல்லாம் இயன்றதைத் தாரீர் !!!!**

# “எதிர்காலச் சமுதாயம் சீரோடும் சிறப்போடும் வாழ ஒன்றுபட்டு உழைக்க முன்வருவீர்!”

—முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர்.



“இன்றைக்குத் தமிழகம் துன்பச் சூழ்நிலையில் இருக்கிறது. நாம் நமது மரபுப்படி எந்தெந்த வகையில் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியுமோ அந்தந்த வகையில் தாங்கிக் கொள்ள, அதேநேரத்தில் எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்ள-வாய்ப்புகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள-நமது மன உறுதி உதவும் என்று நம்புகிறேன்.

“அதற்கு மன உறுதியும், தெளிவான போக்கும், நம்பிக்கையான செயல்பாடும் உதவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**“தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் எதையும் பெருமைக்காகச் செய்ய முன்வரவில்லை. பிறர் போற்ற வேண்டும் என்பதற்காகவும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அப்படிச் செய்ய நாங்கள் தயாராகவும் இல்லை.**

“உண்மையாகவே யார் கஷ்டப்படுகிறார்களோ - அவதிப்படுகிறார்களோ - அவர்களுக்குத் துணை நிற்கவும், சுற்றுச் சார்பில் அமைதி நிலவவும் மக்கள் நல்வாழ்விற்காக தொண்டு செய்து வருகிறோம்.

“மக்களின் வரிப்பணத்தை நல்ல முறையில் செலவழிக்க ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற நிர்வாகிகள், அதிகாரிகளின் திறமையை பயன்படுத்தி, நாங்கள் உறுதிகூறிய பல கடமைகளை நிறைவேற்ற விரும்புகிறோம்.

“அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியது போல ‘தூற்றுவோர் தூற்றட்டும்....’ அதைப் பற்றிக் கவலைப்படாமல்-யார் பேசினாலும், ஏசினாலும்-மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பணியில் தொடர்ந்து செயல்பட்டு முன்னேறி வருகிறோம்.

“என்னுடைய கடமையிலிருந்து நான் நழுவ மாட்டேன். என்னுடன் பொறுப்பில் இருக்கும் அமைச்சர்களையும், அமைச்சர்களாக இல்லாமல் ஆற்றலும், அறிவும், தொண்டுள்ளமும் கொண்ட நல்ல உடன்பிறப்புகளையும் நான் பெற்றிருக்கிறேன்.

“தாய்மார்கள், முதியவர்கள், இளைஞர்கள் ஆகியவர்களின் ஆதரவை நம்பி இருக்கின்றோம். அவர்கள் எங்களுக்குத் தந்த பதவியை, அவர்களுக்குத் தொண்டு செய்யப் பயன்படுத்த வேண்டும் என்ற கடமை உணர்வுடன் பயன்படுத்துவோம்.

“மக்களுக்கு முடிந்த அளவு தொண்டாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் இருந்து வந்திருக்கிறது; இப்போதும் இருக்கிறது.

“நாம் எத்தனை கோடி மதிப்புள்ள சொத்துக்களை-விலை மதிக்க முடியாத உயிர்களை-இழந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது பேரிழப்பிலிருந்தும், துயரத்திலிருந்தும் நல்ல எண்ணத்தோடு செயல்பட்டு மீள்வோம், வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.

“மக்களின் நல்வாழ்விற்காக-ஒளியூட்டும் எதிர்காலத்திற்காக—சீரிய பாதையை அமைத்து முன்னேறுவோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

“மக்களின் நல்வாழ்விற்காக செயல்படும் எங்களுக்கு, அத்தனை பேரும் மனமுவந்து உதவமுன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொருவரும் தங்களின் கடமையை உணர்ந்து, மக்கள் நல்வாழ்வுப் பணியில் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறேன்.

''அதிபர்கள், ஆலை அதிபர்கள், பல்வேறு நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள், ஏன்? உழைத்து, உழைத்து அன்றாடம் சம்பாதிக்கும் அனைத்துப் பகுதி மக்களும் தங்களால் முடிந்த நிதி உதவிகளை அளித்து வருகின்றனர்.

''நமக்குப்பாதுகாப்பாக-அரணாக-இருந்தவர்களை இப்போது துயரம் சூழ்ந்திருக்கிறது. அன்பு உள்ளங்கள், இந்த நேரத்தில் உதவி செய்து தங்களை அடையாளம் காட்டிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

''இதுவரை இல்லாத அளவிற்குப் பல மாநில அரசுகளும், மக்களும் தமிழகத்திற்கு நன்கொடை வழங்கி வருவதையும் பார்க்கிறோம்.

''எதிர்காலச் சமுதாயம் சீரோடும், சிறப்போடும் வாழ—இன்றுள்ள துன்ப துயரத்திலிருந்து மீள-எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் வெற்றி பெற-அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க முன் வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

''மக்கள் நல்வாழ்வுப் பணிகளில் அனைத்துக் கட்சியினரையும் தொடர்ந்து ஒத்துழைப்பு தருமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

''அண்ணா நாமம் வாழ்க! என்று கூறி முடிக்கிறேன்.''

[மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் திருச்சி வானொலி மூலமும், சென்னை வானொலி மூலமும் வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து தமிழக மக்களுக்கு விடுத்த சிறப்புச் செய்தியில் இருந்து தொகுக்கப் பட்டது.]

## மூதறிஞர் ராஜாஜி ஆற்றிய அரும்பணிகள்

மனித சமுதாய முழுவதற்கும் பொதுவான பிரச்சினைகளில் ஒருமித்த கவனம் செலுத்த ராஜாஜி விரும்பினார். அஹிம்சா மார்க்கத்திற்கு அவர் தம்மை அர்ப்பணித்திருந்தார்.

உலக மதுவிலக்கு இயக்கத்தில் ராஜாஜி தீவிரப் பங்கு கொண்டிருந்தார். அணுசக்தி ஆயுதங்களை ஒழிப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்திருந்தார். இதற்காக அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு அவர் சென்றார். உலகில் எல்லோருடைய நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். நீதி நெறியையும், சமயத்தையும் வலியுறுத்துவதன் மூலம் தான் இதைச் செய்ய முடியும் என்று அவர் உணர்ந்திருந்தார்.

—திரு. கே. சந்தானம்.

## புயல்—வெள்ளத்தினால் வீடு இழந்தவர்களுக்கு 5.39 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது!

தமிழ்நாட்டில் புயல்-வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள 4 இலட்சத்து 40 ஆயிரம் குடிசைகளையும், வீடுகளையும் மீண்டும் புதுப்பித்துக் கட்டிக் கொள்வதற்காக தமிழக அரசு உதவிப் பணம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு, 8 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

குடிசை அல்லது வீடுஇழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பு ரூபாய் 100 வீதம் உதவிப் பணம் அளிக்கப்பட்டது. அத்தொகையைத் தற்பொழுது ரூபாய் 200 ஆக உயர்த்தி தமிழக அரசு வழங்கி வருகிறது.

இவ்வகையில் 16—12—1977 வரை மாவட்ட வாரியாக எவ்வளவு பணம் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | | வழங்கப்பட்டுள்ள ரூபாய் |
|---|---|---|
| தஞ்சாவூர் | — | 3,40,39,800.00 |
| திருச்சிராப்பள்ளி | — | 79,19,565.50 |
| புதுக்கோட்டை | — | 24,60,400.00 |
| மதுரை | — | 15,79,835.00 |
| தென் ஆர்க்காடு | — | 37,24,870.00 |
| வட ஆர்க்காடு | — | 1,61,925.00 |
| சேலம் | — | 1,21,340.00 |
| கோயம்புத்தூர் | — | 4,37,915.00 |
| செங்கல்பட்டு | — | 8,92,715.00 |
| இராமநாதபுரம் | — | 23,86,054.00 |
| தருமபுரி | — | 16,690.00 |
| திருநெல்வேலி | — | 1,76,380.00 |
| நீலகிரி | — | 15,310.00 |
| மொத்தம் | | 5,39,32,799.50 |

DIPR.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

பதிவு எண். M. 8676



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"


— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித் தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப் பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை உலகத்தில் எங்குமே இருந்ததில்லை என்று சொல்லத் தோன்றுகிறது."

—அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தோடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.